பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 18 புதன்கிழமை (31-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily இதழ்:126

# தமிழரசு மட்டக்களப்பு வேட்பாளர்

# இராஜன் சத்தியமூர்த்தி சுட்டுக்கொலை!

## அவருடைய மைத்துனரும் பலி; மருமகன் படுகாயம் வீட்டில் வைத்துத் துப்பாக்கி நபர்கள் இருவர் கைவரிசை

காத்தான்குடி,மார்ச்31

**மட்டக்களப்பு மாவட்டத் தமிழரசுக்கட்சி வேட்பாளர் இராஜன் சத்தியமூர்த்தி சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடைய மைத்துனர் கந்தையா கனகசபையும் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார். மருமகன் சீனித்தம்பிப்பிள்ளை படுகாய மடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.**

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் இராஜன் சத்தியமூர்த்தியின் இல்லத்தில்வைத்தே நேற்றுக் காலை 8.30 மணியளவில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. அவர் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லப் புறப்பட்டுக்கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் இனந்தெரியாத இருவர் வந்து சுட்டனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான மூவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கே இராஜன் சத்தியமூர்த்தியும் அவருடைய மைத்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## இராஜன் படுகொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

### மக்கள் அஞ்சாது வாக்களிக்க வேண்டுகோள்

மட்டு. மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் இராஜன் சத்தியமூர்த்தி படுகொலை செய்யப்பட்டமையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேர்தல் நெருங்கிவரும் வேளையில் மட்டு மாவட்டத்தில் அண்மையில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் ஜனநாயக ரீதியான தேர்தலுக்கும் சமாதான முயற்சிக்கும் ஊறு விளைவிக்கத்தக்கதாகும்.

வடக்கு - கிழக்கு மக்கள் தேர்தல் மூலம் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தத் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் இராஜன் சத்தியமூர்த்தி சுட்டுக்கொல்லப்பட்டமையானது மட்டு. மாவட்டத்தில் குழப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தேர்தலைக் கண்காணிக்க 10 சிங்களக் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு,மார்ச்31

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக சிங்களக் கண்காணிப்பாளர்களை அனுப்புவதற்கு, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் தீர்மானித்திருக்கிறது.

இதற்கெனப் பத்து சிங்களக் கண்காணிப்பாளர்கள் இன்று விமானம் மூலம் யாழ்.செல்கின்றார்கள்.

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையத்தின் இத்திடீர் முடிவு தமிழ்ப்பகுதிகளில் அதிருப்தி அலைகளை எழுப்பியுள்ளது.

ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தாவினாலும், வேறுசில வட்டாரங்களினாலும் கொடுக்கப்பட்ட அழுத்தத்தை அடுத்தே நிலையத்தின் தலைவர் பாக்கிய சோதி சரவணமுத்து சிங்களக் கண்காணிப்பாளர்களை வடக்கே

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழினத்தின் தேசிய விடுதலையை வென்றெடுக்கும் இறுதிப்போரே இத்தேர்தல்

### நல்லூர் பிரசாரக் கூட்டத்தில் தங்கன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்31

ஈழத் தமிழினத்தின் தேசிய விடுதலையை வென்றெடுக்கும் இறுதிப் போரே இந்தத் தேர்தலாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதிப் பிரசாரக் கூட்டம் நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தங்கன் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இத் தேர்தலின் மூலம் தமிழினமானது சர்வதேசத்துக்கு நல்லதொரு செய்தியைச் சொல்லவுள்ளது. சமாதானத்தின் உண்மை நிலையைச் சர்வதேசத்துக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் எடுத்துக்காட்டும் விதமாகத் தமிழ்மக்கள் தேர்தலில் வாக்

(20ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற கூட்டமைப்பு வேட்பாளர்கள், மதகுருமார் மற்றும் பிரமுகர்கள்....

*(படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் நேற்று யாழ்.வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம்,மார்ச்31

எதிர்வரும் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்குத் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட நான்கு சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தேர்தல் அதிகாரிகளாகப் பணிபுரியும் கானோசியம் பண்டாரி, பீம் காந்தா சர்மா, எம்.டி. சாஜகான் - ஹான் மற்றும் .'நிஸ் கிறீஸ் குகெர்ஜா ஆகியோரே நேற்று வந்துள்ளவர்களாவர்.

இவர்கள் இன்று காலை யாழ். தேர்தல் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும் யாழ்.அரச அதிபருமான செயபத்மநாதனுடன் யாழ்மாவட்டத் தேர்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குப் பெட்டிகளுடன் வேட்பாளர்கள் எண்ணும் நிலையங்களுக்குச் செல்லலாம்

வாக்குப்பெட்டிகளுடன் கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் அல்லது அவற்றின் பிரதிநிதிகள் வாக்குகள் கணக்கிடப்படும் நிலையங்களுக்குச் செல்லலாம். அதற்குத் தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

தேர்தல் விதிகளின்படி தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட தேர்தல் அதிகாரிகள் மட்டுமே இதுவரை காலமும் வாக்குப்பெட்டிகளுடன் செல்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், இலங்கையில் முதன்முறையாக கட்சிகளின் அல்லது சுயேச்சைக்குழுக்களின் வேட்பாளர்கள் அல்லது கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களின் பிரதிநிதிகள் இப்படி வாக்குப்பெட்டிகளுடன் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வழமையாக வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு முடிவுற்றதும் பெட்டிகளுக்கு 'சீல்'வைக்கப்படும். அதன் பின்னர் பொலீஸாரின் பாதுகாப்புடன் தேர்தல் அதிகாரிகள் 'சீல்' வைத்த பெட்டிகளை, வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்வர். மேலதிக பாதுகாப்புத் தேவைப்படின் இராணுவத்தினர் அழைக்கப்படுவர். இந்த முறை இவர்களுடன் கட்சிகளின் அல்லது சுயேச்சைக்குழுக்களின் வேட்பாளர்களோ அன்றி அவர்களின் பிரதிநிதிகளோ செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். (க)

### இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த

## இந்திய மீனவப் படகோட்டிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம்,மார்ச்31

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவப்படகோட்டிகள் 39 பேருக்கு யாழ். மேல்நீதிமன்றம் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. அபராதத்தைக் கட்டத்தவறினால் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 5 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்குமாறும் மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது.

2003 ஆம் ஆண்டு பல்வேறு கால கட்டங்களில் இலங்கையின் உட்புலக் கடலில் தலைமைப் படகோட்டிகளாக இருந்து அத்துமீறிப் பிரவேசித்து விசைப்படகுகளைச் செலுத்தி வந்தார்கள் என்று 39 இந்திய மீனவப் படகோட்டிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னி

(20ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.

NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

# ஹக்கீமின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு,மார்ச்31

நாளைமறுதினம் தேர்தல் நடக்க இருக்கும் வேளையில் அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன.

நேற்று அதிகாலை சம்மாந்துறை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் கிளை அலுவலகம் எரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இருவர் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர். முகமூடி அணிந்து வநத கோஷ்டி ஒன்றே இத்தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டது எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணியின் தேசியப்பட்டியல் வேட்பாளர் அன்வர் இஸ்மாயிலின் ஆதரவாளர்களே தமது கட்சியினர் மீது இவ்வாறான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர் என முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் எம். மன்சூர், அம்பாறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி சம்மாந்துறை முஸ்லிம் காங்கிரஸ் காரியாலய ஊழியர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு அட்டாளைச்சேனையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி வேட்பாளர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் தேர்தல் கிளை ஒன்று உடைத்து நொறுக்கப்பட்டது. இதையடுத்து அங்கு சுதந்திரக்கூட்டணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களிடையே தொடர்ச்சியான மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இரவு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் சென்ற முஸ்லிம் காங்கிரஸ் ஊர்வலம் ஒன்று கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வீதியில் வழிமறிக்கப்பட்டது. இவ் வீதியிலேயே மு.கா.முன்னாள் எம்.பியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளருமான எச்.எம்.எம். ஹரீஸின் வீடு அமைந்திருக்கிறது.

இங்குகூடிநின்ற ஹரீஸின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுவோர் டயர்களை எரித்தும், மரக்குற்றிகளைப் போட்டும் வீதித்தடையை ஏற்படுத்தினர். இதனால் சுமார் அரை மணி நேரம் அந்த இடம் பெரும் அமர்க்களமாகக் காணப்பட்டது. பொலீஸாரும், படையினரும், பள்ளிவாசல் முக்கியஸ்தர்களும் விரைந்து செயற்பட்டதன் காரணமாக விபரீதம் எதுவும் இடம்பெறவில்லை, ஊர்வலம் அவ்வீதியூடாக தொடர்ந்து முன்னேறாது திருப்பி விடப்பட்டது.

சாய்ந்தமருது, மருதமுனை, நிந்தவூர் போன்ற இடங்களிலும் தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. (க)

# நிமலராஜன் கொலை வழக்கின் முதலாவது சந்தேக நபர் கைது!

யாழ்ப்பாணம்,மார்ச்31

ஊடகவியாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கில் பொலீஸாரால் தேடப்பட்ட முதலாவது சந்தேக நபரான கந்தசாமி ஜெகதீஸ்வரன் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணை கடந்த 24 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்பொழுது மன்றிற்கு சமுகமளிக்காத முதலாவது சந்தேக நபரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இதனையடுத்து மேற்படி சந்தேக நபரை ஊர்காவற்றுறையில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்த பொலீஸார், அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-5)

## ஹொக்கி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஹொக்கிப் போட்டியில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் யாழ். பல்கலைக்கழகம்.

கிறாஸ் கொப்ர்ஸ் 'பி' அணி எதிர் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா அணி. (ஒ-5)

# சிங்கள வாக்காளர்கள் மு.காவுக்கு ஆதரவு

அம்பாறை மாவட்டத்தின் ஆயிரக்கணக்கான சிங்கள வாக்காளர் முஸ்லிம் காங்கிரஸை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள்.

அம்பாறை நகரில் நேற்று நடந்த வைபவமொன்றில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள வாக்காளர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடமிருந்து கட்சி அங்கத்துவ அட்டைகளைப் பெற்றுக்கொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸை ஆதரிக்கும் இந்த சிங்கள மக்கள் திகாமடுல்ல மாவட்டத்தில் உள்ள முவன்கல, பொல்வத்த, ஊஹன, தமன மற்றும் தெஹியத்தகண்டிய மகாவலி 'சி' வலயம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமது முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அமைச்சர் ஹக்கீமுக்கு விமரிசையான வரவேற்பளித்து வாத்திய இசையுடன் அம்பாறை நகரில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

முஸ்லிம் காங்கிரஸின் சிங்கள மகளிர் அணியொன்றும் கிராமங்கள் தோறும் சென்று கட்சிப் பிரசார வேலைகளில் ஈடுபட்டது. சிங்கள பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகங்களும் திறக்கப்பட்டிருந்தன.

# விதி முறைகளில் 'திடீர்' மாற்றம்; மணல் ஏற்றுவதில் வீண் குழப்பம்!

தென்மராட்சி,மார்ச்31

பிரதேச செயலினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துடன் மணல் ஏற்றி வந்த வாகனங்கள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மணல் ஏற்றுவதற்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தை யாழ் அரச அதிபர் பொறுப்பேற்றுக் கொண்டார். இதனால் ஏற்பட்ட குழப்பமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கட்டடப் பணிகளை மேற்கொள்ளும் குடியிருப்பாளர்களுக்கு மணல் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கலாமென்று பிரதேச செயலருக்கு யாழ் அரச அதிபரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அந்தந்தக் கிராம அலுவலரின் சிபார்சுடன் மணல் ஏற்றிச் செல்ல வாகனங்களுக்கு வழி அனுமதிப்பத்திரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த சனி, ஞாயிறு தினங்களில் பிரதேச செயலின் அனுமதிப்பத்திரத்துடன் மணல் ஏற்றிவந்த வாகனங்கள் பொலீஸாரால பிடிக்கப்பட்டு நீதிமன்றில் நேற்று வழக்கு தொடரப்பட்டது.

அப்போது பிரதேச செயலரினால வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து தென்மராட்சிப் பிரதேச செயலர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார்.

நீதிமன்றத்திற்குச் சமுகம் அளித்த தென்மராட்சிப் பிரதேச செயலர் யாழ். அரச அதிபரின் கடிதம் தமக்குக் கிடைக்க முன்னர் பலருக்கு வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்ட மணல், வாகனங்களை உரிமையாளர்களிடம் மீள வழங்குமாறும், மணல் ஏற்றி வந்தவர்களை இவ் வழக்குகளில் இருந்து விடுவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## தந்தை செல்வா அன்று சொன்னது

# எங்களது உரிமையான அரசினை நாம் மீள அமைத்தாக வேண்டும்

**தமிழீழத் தந்தை செல்வாவின் 106 ஆவது பிறந்த நாள் இன்றாகும்.**

ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற நாட்டில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழி, பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் முறை நிலவுகின்ற நாட்டில் ஒற்றையாட்சி உதவாது. அது எண்ணிக்கை ஏற்றமுள்ள ஒரு இனத்தின் பேரினவாதத்துக்குத்தான் வழி வகுக்கும் என்பதனை நன்கு உணர்ந்து இலங்கையில் சிங்களவர்களும், செந்தமிழர்களும் தமக்குள் முட்டிமோதாது ஒவ்வோர் இனத்தின் தனித்துவத்தையும் பேணிய அதேவேளையில், அந்நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்ட உகந்த ஒரேவழி இணைப்பாட்சி தான் என்பதை உணர்ந்து "இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம; தமிழரின் தனித்துவத்தை நிலை நாட்டுவோம். இலங்கைத் தீவில் ஒற்றுமையைப் பேணுவோம்" என்று ஓங்கிக் குரல் எழுப்பினார் நம் செல்வா அவர்கள்.

### இணைப்பாட்சிக்கு மறுப்பு

ஆனால், இணைப்பாட்சி முறை ஒரு நாட்டில் வெற்றி பெற வேண்டுமென்றால் அங்கு வாழும் இனங்களிடையே மற்றைய இனங்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைக்கின்ற இயல்பும் இருக்கவேண்டும். இது இல்லாத நிலையில் இணைப்பாட்சித் தத்துவம் என்பது ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒரு கோட்பாடாக விளங்க முடியாது. 'இணைப்பாட்சியில் இனிய வாழ்வு' காண்போம் என்று குரல் எழுப்பியபோதும், மாநிலத் தன்னாட்சி, பிரதேசசபை, மாவட்டசபை, அதிகாரங்களைப் பனமுகப்படுத்துதல் அல்லது பகிர்ந்துகொள்ளல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சிங்களத் தலைவர்களிடையேயும், சிங்கள மக்களிடையேயும் மன மாற்றத்தைக் கொண்டுவரத் தந்தை செல்வா பல முறை முயன்றார்.

இந்த முயற்சியின் விளைவே 1957 இல் செல்வநாயகம் - பண்டாரநாயகா ஒப்பந்தம் தோன்றியது. 1965 இல் செல்வநாயகம் - செனநாயகா ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1970களில் செல்வநாயகம் - சிறிமாவோ உடன்பாடு உருவாகியது.

ஆனால், மேற்கூறிய ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் எல்லாம் மைகாய்வதற்கு முன்பேயே சிங்களத் தலைவர்களால் கிழித்தெறியப்பட்டதனால் தான் இனிமேல் சிங்கள மக்களோடு கூடி வாழ முடியாது என்ற முடிவிற்குத் தந்தைசெல்வா வந்தார். அவர் காட்டிய வழியைத் தமிழ்மக்கள் அப்படியே ஏற்றனர்.

### சுதந்திரத்தின் பின்

இலங்கைக்கு 1948இல் விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த விடுதலை வெள்ளையனுக்குப் பதில் சிங்களவர் ஆட்சிக் கட்டில் ஏறவே வழி வகுத்தது. மக்களாட்சி என்ற பெயரில் மாக்களாட்சியும், ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழினத்தை ஒழித்துக் கட்டுகின்ற முயற்சிகளும் தொடர்ச்சியாக ஏற்பட்டதன் விளைவே சிங்களப் பெரும்பான்மை இனத்தின் நிலையான ஆட்சிக்கு வழிவகுக்க வாய்ப்பாகியது.

இலங்கை நாடாளுமன்ற அமைப்பில் தந்தை செல்வநாயகம் நம்பிக்கை இழந்தார். இலங்கை நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் சிங்களத் தலைகளை எண்ணியே, எண்ணிக்கை பலம் கொண்டே தீர்க்க முனைந்ததால் சிங்களத் தலைகளும் தமிழ்த் தலைகளும் முட்டி மோதின; இரத்தவெள்ளமும் பெருக்கெடுத்தது.

1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரம், 1958இல் நடைபெற்ற இனப் படுகொலை, 1961இல் காந்திய வழியில் நடத்தப்பட்ட அறப்போராட்டம், சிங்கள அரசினால் வெறி நோக்கோடு முறியடிக்கப்பட்ட நிகழ்ச்சி, பின்பு 1968இல் தமிழ்மக்களுக்குச் சில சலுகைகளை வழங்குவதை எதிர்த்து சிங்கள முற்போக்குவாதிகள் என்று கூறப்பட்ட இடதுசாரி இயக்கங்கள் ஆடிய வெறியாட்டம், பின்பு 1971இல் படித்த சிங்கள இளைஞர்களிடையே ஏற்பட்ட இனவெறிக்கிளர்ச்சி, 1974இல் அரசியலுக்கப்பால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட நான்காம் அனைத்துலகத் தமிழ ஆராய்ச்சி மாநாட்டில் சிங்களக் காவல் துறையினர் 9 அப்பாவித் தமிழர்களைச் சாகடித்த நிகழ்ச்சி, பின்பு குறைந்த அளவு ஆறு அம்சக் கோரிக்கைகளைத் தந்தை செல்வாவின் தலைமையில் சிங்களத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் சிங்களத் தலைமைப் பீடம் இனவெறி



தலைவிரித்தாட, எம் கோரிக்கைகளுக்கு அவர்கள் செவிமடுக்க மறுத்ததன் விளைவே 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் விட்டுக்கொடுக்காது எடுக்கப்பட்ட தீர்மானமாகிய "இழந்த இறைமையை இழந்த விடுதலையை, மீண்டும் நிலைநாட்டினால் அன்றி எமக்கு வாழ்வு இல்லை" என்ற முடிவுக்குத் தந்தை செல்வா வந்தார்.

### இறுதியாணை

இலங்கைக்கு விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்படும் 1948ஆம் ஆண்டு தொட்டு 1976ஆம் ஆண்டு வரை ஈழத் தமிழ்மக்களின் கொடியுரிமை, வாக்குரிமை, குடியுரிமை, நில உரிமை மொழி உரிமை, தொழில் உரிமை, கல்வி உரிமை, மத உரிமை ஆகிய அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்ட நிலையில், எம் தமிழீழ மண்ணிலேயே நாம் வேரோடும் வேரின் மண்ணோடும் சாய்க்கப்படுகின்ற நிலை உருவாகியபோதுதான் இனி மேல் சிங்களக் கொலையாளிகளுடன் கூடி வாழ முயல்வது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று தந்தை செல்வா தீர்க்கமான முடிவுக்கு வந்தார். அதனால்தான், தான் சாவதற்குச் சில காலத்திற்கு முன்பு 19.11.1976 இல் ஈழத் தமிழ் மக்களுக்குத் தம் இறுதி ஆணை என்று கூறத்தக்கமுறையில் உள்ளம் உருக்குகின்ற நிலையில் நெஞ்சைத் தொடும் பாங்கில் வரலாறு படைக்கும் பின்வரும் கூற்றினை இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா மொழிந்தார்.

"தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒரு காலகட்டத்தில் கூட்டாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால், கூட்டரசு மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவது சாத்தியப்படாது. கடந்த கால அனுபவங்கள்மூலம் இப்போது அறிந்துகொண்டு விட்டோம்.

"இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியாகப் பிரிந்து வாழ வேண்டியது தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தமது இழந்த உரிமைகளை ஒரு போதும் மீட்டுக்கொள்ளமுடியாது.

"எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் தங்களுக்கென ஓர் இடம் இருக்கின்றது.

*"எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும் படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமையான அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.*

"தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது. தனித் தமிழ் ஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும் மிகவும் கடினமானதென்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால், நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேறவேண்டும் அல்லது அழிந்துபோக வேண்டும். எனவே, *நாங்கள் போராடித் தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம.* நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம் எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அஹிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்"

ஓர் இனம், மொழி, உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் இழந்தாலும் மீண்டும் வாழ்வு பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், ஓர் இனம் தன் தாயகத்தை, தன் வாழ்வகத்தை, தன் பாரம்பரிய பிரதேசத்தைப் பறிகொடுக்குமாயின் அந்த இனத்திற்கு எதிர்காலமே இல்லை (Land is necessary for the self expression of an ethnic group) (ஓர் இனம் தன்னைத்தானே உணர்த்துவதற்கு அதற்கு ஒரு தாயகம் வேண்டும்)

இந்த உண்மையை ஈழத்து மக்களை வழிநடத்திய எந்தத் தலைவனையும்விட ஆணித்தரமாக வலியுறுத்தி தூங்கிக் கிடந்த ஈழத் தமிழினத்தை விழிப்போடு இருக்கச் செய்த பெருமை தந்தை செல்வாவையே சாரும். இலங்கையில் ஒவ்வொரு முறையும் இனப்படுகொலை ஏற்படுகின்றபோது ஈழத் தமிழ்மக்கள் ஓடி ஒதுங்கி வாழ்வு பெறும் நிலப்பரப்பு இலங்கையின் வடகிழக்கு மாநிலங்களாகும். இந்த நிலப்பரப்பைத்தான் எங்கள் தமிழ் ஈழமென்று அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு ஓங்கிக் குரல் எழுப்புகின்றனர்.

தந்தை செல்வா அவர்கள் செப்பிய உறுதி மொழிகள் இதோ.

"தமிழினத்தில் உரிமைப் போராட்டத்தில் இரத்தம் சிந்தியும், சிறையேற்றும், பொருள் நட்டமடைந்தும், உயிர் துறந்தும் அல்லலுற்றுள்ளோம். இருந்தும் இதுவரை வெற்றி கிடைக்கவில்லை. ஆனாலும் வெற்றி கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றேதான் நான் கூறவிரும்புகிறேன்.

மா.க.ஈழவேந்தன்

*கடந்த காலங்களில் பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதி வெற்றி தமிழினத்துக்காக என்பது சந்தேகமறத் தெளிவாகிவிட்டது. இருந்தாலும் பூரண வெற்றி கிடைக்கும்வரை போர்க் கோலமிருந்தேயாகவேண்டும். தோல்வி மனப்பான்மை அறவே கூடாது.*

### தமிழீழம் பேரம்பேசும் கோரிக்கையல்ல

நான் விடுக்கும் தனிநாட்டுக் கோரிக்கை மாற்றமுடியாத முடிவாகும். இது வெறும் பேரம்பேசுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கையல்ல. (Our. demand for a separate state is an irrevocable Decision. It is not just made for bargaining purposes) தனிநாட்டுக் கோரிக்கை என்பது ஒரு புதிய கோரிக்கையல்ல. ஈழத்தில் ஒரு காலத்தில் தமிழர் தனியரசு செலுத்தியிருந்தோம். இழந்த அவ்வரிசை மீண்டும் நிலைநாட்ட மீண்டும் உறுதி பூண்டு விட்டோம்.

தூய உள்ளத்தில் துணிவோடு எழுந்த இம் மேற்கோள்களை நாம நினைவில்கொண்டு பணி தொடர்வோம்.

("தமிழீழத் தந்தை செல்வா" என்ற நாலிலிருந்து பெறப்பட்டது.)


# நாளை மறுதினம் உங்களுக்கு நீங்களே தீர்ப்பெழுதுங்கள்


"
சங்கரிகளாய்...
டக்ளஸ்களாய்...
இன்னும் பலவாய்...
அந்நிய சக்திகளின்
அரூபகரங்களும்,
பேரினவாதிகளின்
பூதரூபங்களும்
முகமூடிகளுடனும்..
களக் கூத்தாடிகளாயும்..
உங்களின் முன்னே....
இனங்கண்டுகொள்ளுங்கள்
"


தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்கள்
தந்தை செல்வாவின் கனவையும்
தமிழீழத் தேசியத்தலைவரின் வழியையும்
ஏற்றுக்கொண்டவர்கள் –
வாக்களிக்கும்போது
இதை நினைவில் வைத்திருங்கள்.


போராடும் வன்னி நிலம் இவர்களுக்குப் பூச்சொரிகிறது.
நீர் போடும் வாக்குகள் இவர்களுக்குப் பலம் சேர்க்கிறது.

**வீட்டுக்குப் போடும் புள்ளடி**
**விடுதலை நோக்கிய முதலடி**






சுரேஸ் பிரேமச்சந்திரன்
①



ஸ்ரீகாந்தா
②



சிவாஜிலிங்கம்
③



சிவநேசன்
④



கஜேந்திரகுமார்
⑤



ரவிராஜ்
⑥



பத்மினி சிதம்பரநாதன்
⑦


சிவமகாராஜா
⑧



சீ.வீ.கே.சிவஞானம்
⑨


கஜேந்திரன்
⑩


சூ.சிறில்
⑪


மாவை.சேனாதிராஜா
⑫

பிரசார வெளியீட்டு வாரியம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



# இவர் யார்?

# இவர்தான்



தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்து
தமிழ் இளைஞர் பேரவையை உருவாக்கி
தமிழ்மக்கள் விடுதலைக்காக தொடர்
போராட்டங்களை நடத்தி வெஞ்சிறையில்
நீண்ட பல ஆண்டுகள் வாடிய

# மாவை சேனாதிராசா அவர்களேதான்.

★ கல்லூரி மாணவனாக இருக்கும்போதே 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றியவர்.
ஈழத்தமிழ் இளைஞர் இயக்கம், தமிழ் இளைஞர் பேரவை என்று மாணவர் இளைஞர் இயக்கங்களை உருவாக்கி போராட்டங்களை நடத்தியதால் 1968ஆம் ஆண்டு முதலாவதாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.
1968இல் தமிழரசுக் கட்சி செயற்குழு உறுப்பினரானார்.

★ தடுப்புக்காவல் முடிந்தபின் திருகோணமலை கித்துலூற்றுப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றக்காரருக்கெதிராகத் தமிழ் இளைஞர்களைக் குடியேற்றும் போராட்டத்திலீடுபட்டார். நீதிமன்றத்தில் வழக்குகள் இவர்களுக்கெதிராக நடத்தப்பட்டன.

★ 1972 மே 22 ஸ்ரீலங்கா அரசின் புதிய அரசமைப்புக்கெதிராக நடத்திய போராட்டங்களில் வன்முறையைத் தூண்டினார்கள் எனக் கைதுசெய்யப்பட்டு இரண்டரை ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளானார்.

★ விடுதலை செய்யப்பட்ட சிலநாள்களில் 1975 ஜூலையில் மீண்டும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டபொழுது கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

★ 1976இல் கொழும்பில் அணிசேரா நாடுகள் மாநாட்டின்போது வெலிக்கடைச் சிறையில் ஏனைய தமிழ்க் கைதிகளுடன் உண்ணாவிரதப் போராட்டம் 21நாள்கள் தொடர்ந்தது. தந்தை செல்வாவின் வேண்டுகோளினால் போராட்டம் நின்றது.

★ 1977 ஆடிக்கலவர காலத்தில் காசி ஆனந்தனும், மாவை சேனாதிராசாவும் கடல்வழியாக இந்தியா சென்றனர் என்றும் திரு.பிரபாகரனும் சென்றார் என்றும் புலனாய்வுத்துறை விசாரணையில் கைதுசெய்யப்பட்டார்.

★ 1977 இனக்கலவரம் தொடர்பாக சன்சோனி ஆணைக்குழு விசாரணையில் இவர்கள் - அப்பொழுதும் சிறையில் -

★ 1978 ஜூலையில் கியூபா, ஹவானா இளைஞர் மாநாட்டுக்குச் சென்றார்.

★ 1978இல் ஜே.ஆர். அரசின் புதிய அரசமைப்புக்கெதிராக மட்டக்களப்பில் மாபெரும் போராட்டம். மீண்டும் கைது செய்யப்பட்டார்.

★ ஒற்றையாட்சியை எதிர்த்தார். தமிழீழத்தைக் கோரினார். ஆயுதப் போராட்டத்தைத் தூண்டினார் என மட்டக்களப்பு - கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கு நடந்தது. ஓராண்டின் பின் விடுதலை -

★ 1983இல் ஒக்ரோபரில் மீண்டும் கைது. "திரு.பிரபாகரனைச் சந்தித்தார்." என்பதுதான் குற்றச்சாட்டு. ஆனையிறவு இராணுவ முகாமில் சித்திரவதையின்போது இறந்துவிட்டதாகத் தூக்கி வீசிவிட்டனர் இராணுவத்தினர். அப்பொழுதும் உயிர் தப்பினார்.

★ 11ஆண்டுகளில் மொத்தம் ஏழு ஆண்டுகள் சிங்களச் சிறைகளில் சித்திரவதையும் உயிர்ப் போராட்டமுமான வாழ்க்கையே.

இதன் பின்னர் 1989இல் தேசிய மட்ட நாடாளுமன்ற உறுப்பினர். 2000ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர். பின்னர் 2001 டிசெம்பரில் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்.

★ 2001 டிசெம்பர் தேர்தல் காலத்தில்தான் நவம்பர் 28இல் ஊர்காவற்றுறை நாரந்தனையில் ஏனைய தொண்டர்களுடன் கொலைகாரர்களால் தாக்கப்பட்டு, மரணத்தின் வாயிலிலிருந்து உயிர் தப்பினார்.

★ 2000 ஆம் ஆண்டுகளின் பின்னும் உயர் பாதுகாப்பு வலயத்திற்கெதிரான போராட்டங்களிலும், கடற்றொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டங்களிலும் முழுமையாகப் பங்குகொண்டார்.

★ உயர்பாதுகாப்பு வலயங்களுக்கெதிராகவும், வெளியேற்றப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை, மீள்குடியேற்றத்திற்காகவும் உயர்நீதிமன்றத்திலே அடிப்படை உரிமைகள் வழக்கை நடத்திக்கொண்டிருக்கிறார்.

★ இவர் ஒரு எம். ஏ. (வரலாற்றுத்துறை) பட்டதாரி ஆவார். இவர்தான் உங்கள் மாவை சேனாதிராசா. இலங்கைத் தமிழ் அரசுக்கட்சிப் பொதுச் செயலாளர், த.வி.கூட்டணி இணைப் பொருளாளர், யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்.

## தமிழின விடுதலைப் போரின் மூத்த போராளியே
## எங்கள் தெரிவு!
## மாவை சேனாதிராசா இல. 12

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



X 12

- தேர்தல் பிரசாரத்துறை

உதயன்

## காத்திருக்கும் வரலாற்றுப் பணி

இலங்கையைப் பொறுத்தவரை மற்றுமொரு நாடாளுமன்றத் தேர்தலின் வாக்களிப்பு நாளைமறுதினம் நடம்பெறுகின்றது.

ஆனால், ஈழத் தமிழரைப் பொறுத்தவரையிலோ அடிக்கொரு தடவை நடைபெறும் சாதாரண தேர்தலோ, வாக்களிப்போ அல்ல இது.

1977இற்குப் பின்னர் தமிழினம் சந்திக்கப் போகும் மிக முக்கிய தேர்தலாக - கருத்துக்கணிப்பாக - இது அமையப்போகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் அமைதியான - கௌரவமான - வாழ்வுரிமைக்காக மூன்று தசாப்த காலம் சிங்களப் பேரினவாதத்துடன் அகிம்சை வழியிலும் - சாத்வீக முறையிலும் - போராடிய தமிழினம், வேறு வழியின்றி 1977இல் பிரிந்து செல்வதற்குத் தீர்மானித்தது. அதற்கான - தமிழினத்தின் கருத்துக் கணிப்பை வெளிப்படுத்துகின்ற - பொதுத் தேர்தலாக 1977 ஜூலை வாக்களிப்பைத் தமிழினம் அணுகியது. தமது ஏகோபித்த கருத்தைத் தங்கள் வாக்குகள் மூலம் ஈழத் தமிழர்கள் வெளிப்படுத்தினர்.

பிரிந்து செல்லும் தனியுரிமையை அகிம்சை, சாத்வீக வழிகளிலோ அல்லது மென்முறையிலோ எட்டமுடியாது என்பதால் வன்முறை வழியில் அதனைப் பெறுவதற்குத் தமிழினம் முயன்றதும், இலங்கைத் தீவில் பெரும் போர் வெடித்ததும், பேரழிவுகள் ஏற்பட்டதும் கடந்த கால சரித்திரங்கள்; முடிந்து போன வரலாற்று நிகழ்ச்சிகள்.

இப்போது யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஐக்கிய இலங்கைக்குள் - அமைதி வழியில் - இணக்கத் தீர்வு காண்பதற்கான கடைசி வாய்ப்பும் மீண்டும் அளிக்கப் பட்டிருக்கின்றது.

தனி நாடு கேட்ட தமிழினம், அதைவிட்டுக் கீழிறங்கி, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வின் கீழ் சிங்கள இனத்துடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டு ஐக்கியமாக வாழ இணங்கி நிற்கின்றது.

இது தொடர்பான தமிழர் தரப்பின் அபிலாசைகளை - எதிர்பார்ப்புகளை - அவாவை - வெளிப்படுத்துகின்ற ஒரு கருத்துக் கணிப்பாக இத்தேர்தலை தமிழினம் அணுகுகின்றது.

தமிழினத்தின் முடிவு - தீர்மானம் - என்னவென்பதை அறிவதற்காக இத்தேர்தல்களின் பெறுபேறுகளைச் சர்வதேச உலகமுமே பார்த்துக் காத்திருக்கின்றது.

இனத்தின் விடுதலைக்காக உயிரும், உடலும், உதிரமும் அர்ப்பணித்துப் போராடிய தமிழ்ப் போராளிகளுக்குத் தமிழினம் அளிக்கப்போகும் அங்கீகாரம் என்னவென்பதை வெளிப்படுத்தும் அளவுகோலாகவும் இத்தேர்தல் அமைய இருப்பதால், அது தொடர்பில் தமிழினத்தின் பங்கு பணியும், பொறுப்பும் இரட்டிப்பாகுகின்றன.

போராளிகள் தங்கள் உயிரையே ஈகம் செய்து இனத்தின் உரிமைக்காகப் போராடிய சமயம், வெளியிலிருந்து தார்மீக ஆதரவு வழங்கிக்கொண்டு பார்த்திருந்த தமிழ்ப் பொதுமக்களுக்கு இப்போது தமது பங்களிப்பைச் சரியாக - உரிய விதத்தில் - வழங்குவதற்கு நல்லதோர் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

சரித்திரத்தின் திருப்புமுனையில் நிற்கின்ற தமிழினத்துக்கு அதன் ஒவ்வொரு பிரஜையும் ஆற்றவேண்டிய வரலாற்றுக் கடமையாக இத்தேர்தல் வாக்களிப்பு வந்து அமைந்திருக்கின்றது.

தமிழினத்தின் இராணுவ வல்லமையே இன்று அதன் பாதுகாப்பு அரண். அந்தப் பாதுகாப்பு அரணுக்கு மேலும் வலுச்சேர்க்கும் ஒரு சாத்வீக வழியாக வெள்ளியன்று நடைபெறவுள்ள தேர்தல் வாக்களிப்பு வாய்த்திருக்கின்றது என்பதையும் தமிழினம் உணரவேண்டும்.

தமிழரின் ஐக்கியத்துக்கும், தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் வேட்டு வைக்கும் ஐக்கிய விரோத சக்திகளை இத்தேர்தலில் நிராகரித்து ஒதுக்குவதன்மூலம் தமிழரின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உலகறியச் செய்ய ஒவ்வொரு தமிழ் வாக்காளனும் முன்வரவேண்டும்.

இனத்தின் எதிர்கால சுபீட்சத்துக்காக ஆற்றவேண்டிய வரலாற்றுப் பணி இது.

இந்தப் பணியில் நமது இனம் கோட்டை விடுமானால், அடிமைத் தளையிலிருந்து மீள்வதற்கு நமது இனத்துக்கு இனிமேல் வாய்ப்போ, சந்தர்ப்பமோ கிட்டாது. மீட்சியே கிட்டாத பாழும் எதிர்காலத்தைத்தான் எமது அடுத்த சந்ததி எதிர்நோக்கவேண்டி நேரும். அதை உணர்ந்துகொண்டு தமது கருத்தை வாக்குகள் மூலம் தவறாது வெளிப்படுத்துவது தமிழரின் இன்றியமையாத கடமையாகின்றது.

பொன்னான வாக்குகளை வீணாக்காமல் ஒவ்வொரு தமிழனும் தவறாது வாக்களித்தால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அந்த அதிகரிப்பு ஒரே அணியைச் சேர்ந்தவர்களையே உறுப்பினர்களாக்கினால் மட்டுமே அர்த்தமுள்ளதாக அமையும். அப்போதுதான் சர்வதேசங்களும் தமிழர்களின் விடுதலை அபிலாசைகளை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வழி பிறக்கும்.

இதனைச் செய்வதற்கான வரலாற்று வாய்ப்பை - இதுவரை காலமும் இல்லாத திருப்புமுனையை உண்டாக்கும் வாய்ப்பை - ஈழத் தமிழர்கள் அனைவரும் தப்பாது பயன்படுத்தவேண்டும். அதுவே வெள்ளித் தேர்தலின் பிரதான தேவை.

# சுதந்திரமான, கௌரவமான வாழ்வுக்கு ஒரே அணிகொண்ட பலமே தேவை

## பிரான்ஸ் தமிழர் அமைப்புகள் வலியுறுத்து

பரிஸ்,மார்ச்31

தமிழ் மக்களின் சுதந்திரமானதும் கௌரவமானதுமான வாழ்வுக்கு ஒரே அணிகொண்ட பலமே தேவை. இந்த வரலாற்று உண்மையை அனைவரும் உணர்ந்து ஓர் அணியில் திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்.

- இவ்வாறு பிரான்ஸில் உள்ள தமிழர் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

பிரான்ஸில் உள்ள 40 தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, பிரான்ஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பு, பிராங்கோ தமிழ் மாணவர் அமைப்பு, பிரான்ஸ் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு, பிரான்ஸில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியன இணைந்து இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்பார்ந்த தமிழீழ மக்களே! எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியம் பெருவெற்றிபெற உங்கள் வாக்குகளைத் தமிழ்க் கூட்டமைப்புக்கு வழங்குங்கள். இவ்வரலாற்றுக் கடமையைக் கருத்திற்கொண்டு உழையுங்கள்.

எவ்வாறு இந்த வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்த முடியும்? இதற்கான வரலாற்று வாய்ப்பு எவ்வாறு எமக்கு அமையப்போகிறது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய கொள்கைகளை இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துப் போட்டியிடுகிறது என்பதனை நோக்குவோம். தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும், உயர் பாதுகாப்பு வலயம், இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மக்கள் தங்கள் வாழ்விடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்படவேண்டும், தரையிலும், கடலிலும் மக்கள் தங்கள் வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டுள்ள இராணுவ அழுத்தங்களும், தடைகளும் அகற்றப்படல் வேண்டும், மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கும், பொருளாதாரத் திட்டங்களுக்கும் அனைத்துலக சமூகம் நேரடியாக உதவிகளை வழங்கவேண்டும், சிறையில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படல் வேண்டும், ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன தமிழீழ மக்கள் குறித்துச் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு நியாயம் வழங்கப்படல்வேண்டும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டு தமிழர் தாயகத்தில் பூரண அமைதியும் இயல்பு நிலையும் ஏற்படுத்தப்படல் வேண்டும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகள். தமிழீழ மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்குத் தடை விதித்துள்ள நாடுகள் அத்தடையினை அகற்றவேண்டும் - என்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ள இக்கொள்கை நிலைப்பாடு தமிழீழ மக்கள் அனைவரதும் சாதி, மத, பிரதேச எல்லைகளைக் கடந்த நிலையில் தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவன என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. எனவே, இவ்வரலாற்றுத் தேவையை உணர்ந்து உங்கள் தமிழ்க் கூட்டமைப்பிற்கு வாக்குகளை வழங்குங்கள்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியாக இருந்தாலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி ஆட்சியினை அமைக்கமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும். இன்றுள்ள உலக ஒழுங்கில் எமது சுதந்திரமானதும், கௌரவமானதுமான வாழ்வை பலம்தான் தீர்மானிக்கின்றது. இந்த உண்மை உலகறிந்ததே. இந்த வரலாற்று உண்மையை அனைவரும் உணர்ந்து, ஓர் அணியில் திரண்டு தமிழ்க் கூட்டமைப்பிற்கே வாக்களியுங்கள்.

அனைவரும் தெளிவாக இருக்கவேண்டும். சமாதானத்தின் மூலம் ஒரு நிரந்தரத் தீர்வுக்கான வழிகள் திறந்துவிடப்பட்டிருக்கின்றதே அன்றி எமக்கான இறுதித்தீர்வு எட்டப்படவில்லை என்பதை நாம் மறந்துவிடாமல் அனைவரும் தமிழ்க் கூட்டமைப்பிற்கே வாக்களிக்கவேண்டும்.

இந்தவகையில் இந்த வரலாற்று வாய்ப்பினை நழுவவிடாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களைப் பெருவெற்றி பெற வைக்கத் தயாராகுமாறு தமிழீழ மக்களைப் பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களாகிய நாம் வேண்டிக்கொள்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றிருக்கும் இச்சூழலின் நிலையறிந்து, காலத்தின் தேவையறிந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள இவ்வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்!. (ம-8)

# வாய்ப்பைப் பயன்படுத்தி வாக்களித்து வரலாற்றுப் பெருமையைத் தேடுங்கள்

## டென்மார்க் தமிழர் அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுதல்.

மார்ச்,31

எதிர்வரும் தேர்தலில் தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகச் செய்தோம் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் டென்மார்க் வாழ் ஈழத்தமிழர்கள்.

இது தொடர்பாக டென்மார்க் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் அன்பான வேண்டுகோள்.

தமிழீழ மக்களாகிய நாம் மறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல வழிகளில் போராட்டங்களை நடத்தினோம். ஆனால், அச்சந்தர்ப்பங்களில் எமக்கு உரிமைகளைத் தரமறுத்த சிங்களப் பேரினவாத அரசுகள் எம்மீது அரச பயங்கரவாதத்தையே கட்டவிழ்த்து விட்டன.

இன்று தமிழீழ மக்கள் யாவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரண்டு தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் விடுதலைக்காகப் போராடி வருகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளே எமது ஏக பிரதிநிதிகள் என்ற நிலையில் போராட்டம் சர்வதேச ரீதியில் விரிவாக்கம் பெற்றுள்ளது. தற்போதைய 2 வருடங்களுக்கு மேற்பட்ட சமாதான முயற்சிக் காலத்தில், அச்சமாதானத்தின் பலாபலனாக, பெருமளவிலான எவ்வித, புனர்வாழ்வு, புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ள தமிழீழ மக்களைச் சென்றடையவில்லை.

தமது சொந்த வீட்டில், ஊரில் வாழமுடியவில்லை. இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் விடுதலைப் புலிகளின் தலைமையால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக அலகை மேலும் காலம் தாழ்த்தாது அமுல் செய்யவேண்டும் என்று வலியுறுத்தி தமிழ் மக்கள் அனைவரின் ஏகோபித்த தெரிவாக தமிழர் தேசியக் கூட்டமைப்பு வரும் தேர்தலில் போட்டியிடுகின்றது என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே.

ஆகையால் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், வரலாற்றுத் திருப்புமுனை ஒன்றினை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

நீங்கள் தேர்தலில் தமிழர் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிப்பதன் மூலம் உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தினோம் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றுக்கொள்வீர்கள்.

இதை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நீங்கள் செய்யவேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

நீங்கள் ஏப்ரல் 2ஆம் நாள் தமிழர் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து ஒரு புதிய வரலாறு படையுங்கள்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய நாம் சித்திரை 5ஆம் நாள் ஐ.நா. முன்றிலில் 'பொங்கு தமிழாக'ப் பொங்கியெழுகின்றோம்.

, எமது இலக்கு நோக்கிய பயணத்தில் எமது தாயக உறவுகளாகிய உங்களுடன் இணைந்தே பயணிப்போம் என உறுதி கூறுகின்றோம் - என்றுள்ளது. (ம)

# பனை அபிவிருத்திச் சபை வளர்ச்சிக்கு ரூ.2 கோடி நிதி

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ். மாவட்ட துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையின் வளர்ச்சிக்கென யாழ். மாவட்ட அரச அதிபர் 2 கோடியே 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபைக்குக்கீழ் குடாநாட்டில் இயங்கும் நிறுவனங்கள் இந்த நிதியைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என பனை அபிவிருத்தி சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் சிதைக்கப்பட்ட நாவற்குழி பனை ஆராய்ச்சி நிலைய புனரமைப்புப் பணிக்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவும் - யாழ். குடாநாட்டின் பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு 65 லட்சம் ரூபாவும் -

பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் வேலணை ஆகிய பகுதிகளில் இயங்கமுடியாதுள்ள பனம் துப்புத் தொழிற்சாலைகளை மீள இயக்குவதற்கு 35 லட்சம் ரூபாவும் - இந்த நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.

மிகவிரைவில் இந்த அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார் (ம-5)

### நாளை

பங்குனி 19
வியாழக்கிழமை
(01.04.2004)
திதி : ஏகாதசி
இரவு 7.52 வரை.
ஏகாதசி விரதம்
நட்சத்திரம்: ஆயிலியம்
இரவு 7.14 வரை.
சுபநேரம்: 7.41 - 9.11
ராகுகாலம்: 1.41 - 3.11
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மூடன் தன் முட்டாள்தனத்தில் உறுதியாக இருந்தால் விவேகியாகி விடுவான்.

### கடலொலியைச் சிவாகம ஒலிஅடைக்கும்

யாழின் ஒலிவிரும்பு நசையால் யாழ்நகரி[illegible]
தாழ்வில் செலும்மிகுர கின்னரம் தலை[illegible]க்கும்
வாழ்வுதரும் வண்ணார்பண்ணை முதல்விழா
ஈழக் கடலொலியைச் சிவாகம ஒலி அடைக்கும்.

- ஏழாலையூர் சிவ.சண்முகவடிவேல்

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 15ஆம் திருவிழா)



# செல்வி மகேஸ்வரி வேலாயுதம் LLB

சட்டத்தரணி, மனித உரிமையாளர்

ஐக்கிய நாடுகள் (U.N.) சபையின் விசேட அந்தஸ்தைப் பெற்றுள்ள மனித கௌரவத்திற்கான மன்றத்தை நிறுவியவரும், அதன் செயலாளராக இயங்குபவரும்.

ஊனமுற்றவர்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் அங்கத்தவர்.

அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டு விளங்கும் மதங்களுக்கும் சமாதானத்திற்குமான உலகப் பேரவையின் அங்கத்தவர்.

இன்னும் பல சர்வதேச, தேசிய அமைப்புகளில் அங்கத்துவம் பெற்று விளங்கும் மகேஸ்வரி வேலாயுதம் ஆற்றிய சேவைகள் ஏராளம்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பட்டதாரியும், சட்டத்தரணியுமாகிய இவர் எழுபதுகளிலிருந்தும் ஈழமக்களின் விடிவிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

1977 இலிருந்து தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தோடு (TRRO) ஆரம்பித்த பொதுச்சேவை இன்று வரை தொடர்கிறது.

1984 இலிருந்து தென் தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வாழ்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தவர்.

மண்டபம், மதுரை, திருச்சி முகாம்களில் அம்புலன்ஸ் வசதிகளுடன் கூடிய மருத்துவ நிலையங்களை நிறுவி அகதிகளுக்கு மருத்துவ உதவி செய்தவர்.

அனாதரவாக இந்தியாவுக்குச் சென்ற ஈழப் பெண்களுக்கு விடுதி அமைத்து, தொழிற்பயிற்சி வழங்கியவர்.

1996 இல் கிருஷாந்தி கொலை செய்யப்பட்டபோது தென்னிலங்கைப் பெண்கள் அமைப்புகளுடன் இவர் சேர்ந்து செய்த போராட்டங்களின் விளைவு **Trial - at Bar** விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

கிருஷாந்தி வழக்கின் சாட்சியத்தின்போது செம்மணி விவகாரம் தெரியவர, அங்கும் சர்வதேச நிபுணர்களை இங்கு கொண்டு வந்து இவரும் உள்ளூர் பார்வையாளராக இருந்து செயற்பட்டவர்.

சாரதாம்பாள் விவகாரத்திலும் இவரே முன்னின்று நீதிகேட்டு கொழும்பு, கனத்தை மயானத்தில் மரணச்சடங்கை நடத்தியவர்.

ஆயிரமாயிரம் இளைஞர், யுவதிகளுக்கு நீதிமன்றில் வாதாடி, பிணைப்பணமும் செலுத்தி உங்களிடம் அவர்களைக் கொண்டு வந்து ஒப்படைத்தவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு இளைஞர்களைக் கொண்டு செல்வதைத் தடுத்தவர்.

யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் இயங்கக் காரணமாக இருந்தவர்.

யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் தொடங்கி இயங்குவதற்கு வழி செய்தவர்.

கிழக்கு மாகாணத்தில் ஆண்கள் பிரதி ஞாயிறுதோறும் இராணுவ முகாம்களில் வேலை செய்துவந்த நடைமுறையை நிறுத்தியவர்.

அநாவசியக் கைதுகளை நிறுத்த உதவியவர்.

1998 இலிருந்து யாழ்ப்பாணத்தில் இளைஞர், யுவதிகள் காணாமல் போவதை நிறுத்தப்பாடுபட்டவர். சித்திரவதைகளுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுப்பவர்.

வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையில் சகல பகுதிகளிலும் மனித உரிமைகள் மேம்படக் காரணமாக இருந்தவர்.

**EPDP** கட்சி, 1997 ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்து மனித உரிமைகளை மேம்படுத்தி இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்பிய பின்னர் 2000 இற்குப் பின்னர் வந்தவர்கள் அண்மைக்கால வரலாற்றையே திரிவுபடுத்துகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பல நாடுகளில் இடம்பெறும் மகாநாடுகளில் கலந்துகொண்டு புள்ளிவிவரங்களுடன் அத்துமீறல்களை எடுத்துரைப்பவர்.

சர்வதேசம் எங்கும் வாழும் தமிழருக்கு அகதி அந்தஸ்துக் கிடைக்க பெரியளவில் உதவியவர்.

எமது நிறுவன அறிக்கைகள் சர்வதேச நாடுகளில் நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது அகதிகள் நாடு கடத்தப்படுவதற்கெதிராக சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுப்பவர்.

ஆண், ஆதிக்கம் நிறைந்த த்மிழர் அரசியலில் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு நான் கொண்ட கொள்கைக்காக உறுதியோடு செயற்பட்டு சாதனைகள் பல புரிந்து கொண்டு இருப்பவர்.


தனது செயற்பாடுகளின் மூலம் வெளிநாடுகளில் ஈழத்தமிழ்ப் பெண்களின் ஆளுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்.

கடந்த தேர்தலில் **EPDP** கட்சியில் போட்டியிட்டதன் மூலம் தமிழ் கட்சிகளின் முதன்முதலாக தேர்தலில் போட்டியிட்ட தமிழ் பெண் என்ற பெருமைக்கும் உரியவர்.

தனக்கென்று வீடுவாசல், சொத்து, சுகம் எதையும் சேர்க்காமல் மக்கள் சேவைக்காக அர்ப்பணித்தவர்.

இவரை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்வதன் மூலம் ஏழை மக்களின் வாழ்வில் விடிவு ஏற்படும்.

சீதனமுறைமை ஒழிந்து பெண்கள் நல்வாழ்வு வாழ வழியேற்படும்.



2001 இல் நெல்லியடிச் சந்தையை மகேஸ்வரி வேலாயுதம் பொது மக்கள் பாவனைக்கு திறந்த போது...!

இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக் கிட்டும்.
அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடிவு கிடைக்கும். ஆகையால் பெரும்பான்மை வாக்குகள் மூலம் இவரை தெரிவு
செய்து அனுப்புவதன் மூலம் முதல் தமிழ்ப் பெண் பிரதிநிதியை அனுப்பிய பெருமை யாழ். மக்களைச் சேரட்டும்.
மீண்டும் இம்மண்ணின் மனித மாண்புகள் புத்துயிர் பெற்று மனித கௌரவம் மற்றும் உரிமைகள் தழைத்தோங்கவும்,
சகலரும் சுபீட்சத்துடன் வாழவும் ஆதரிப்பீர் **EPDP** ஐ.

**வாக்களிப்பீர் வீணைச் சின்னத்திற்கு!**

**வீணைக்குப் போடும் வாக்கு நேர்மையான அரசியலுக்கு போடும் வாக்கு.**

| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி |  | X |
|---|---|---|

**மனித கௌரவத்திற்கான மன்றம், கொழும்பு.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் தோற்றி எமது பாடசாலையான யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையில சித்தியெய்திய மாணவர்களான

| | |
|---|---|
| நி.சசியானந்தன் | - 7A, B,C |
| க.யமுனா | - 5A, B, 2C, 2S |
| செ.கோகில் | - 4A, 2C, S |
| மு.சுதாகரன் | - 3A, B,2C, 3S |
| நா.அர்ச்சனா | - 2A, 3C, 4S |
| வ.கிஷாந்தினி | - B,3C,3S |

ஆகியோர் சிறந்த பெறுபேறுகளை பெற்றிருப்பதுடன் இவர்கள் மென்மேலும் உயர்கல்வி பயின்று சிறந்த பெறுபேறுகளை பெற வாழ்த்துக்கின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
கைதடி நாவற்குழி தெற்கு, கைதடி.

(30281) (21-19-18)

## வாழ்த்துகின்றோம்

உடுவில் மகளிர் கல்லூரியின்
பழைய மாணவியும், ஆசிரியையுமான

**செல்வி பிரபா பரமேஸ்வரன்**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் நடனத்துறையில் *முதலாம் வகுப்பில்* (1st Calss) சித்தியடைந்தமைக்காக துரைராஜா தங்கப்பதக்கம் பெற்றுக் கொண்டமையையிட்டு அவரை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வலைப்பந்தாட்ட அணியினர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

(C/34155)(21-19-18)

## பாராட்டி வாழ்த்திகிறோம்



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
யாழ்.பல்கலைக்கழக
உயிரியல் விஞ்ஞான மாணவி
**திருமதி அமுதினி பொன்திவாகரன்**
27.03.2004 அன்று நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில்
விஞ்ஞானமாணி (B.Sc.)
பட்டம் பெற்றதையிட்டு
மனமார வாழ்த்துகிறோம்.

திரு.திருமதி
ஜெயக்குமார் மேகலா,
கனடா.

(30283) (21-19-18)

## மருத்துவக் கருவிகள் அன்புளிப்பு

கிளிநொச்சி ஸ்ரீமகாதேவா ஆச்சிரமத்திற்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் சார்பில் மருத்துவப் பரிசோதனைக் கருவிகள் வழங்கப்பட்டன.

கடந்த வாரம் கைதடியில் இடம் பெற்ற லயன்ஸ் கழக நிகழ்வில் இரத்த பரிசோதனைக் கருவியும் ஆசிரமத்திற்கு வழங்கப்பட்டன.(ஓ-117)

## பசாம் ஓதுதல் போட்டி

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி பசாம் ஓதும் போட்டி நடைபெறவுள்ளது.

குருநகரைச் சேர்ந்த மக்கள் கலந்து கொள்ளவுள்ள இப்போட்டியில் பங்கு பற்ற விருப்பம் தெரிவித்த போட்டியாளாகளுக்கு குருநகர் புனிதயாகப்பர் ஆலயத்தில் பயிற்சிப்பட்டறை ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. (ம-10-51)

## காணி விற்பனைக்கு

*அல்வாய் மாலுச்சந்திப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பருத்தித்துறை – யாழ். பிரதான வீதிக்கு வடக்கே 'தல்வளலை' எனப்படுகின்ற 75 எலுமிச்சை மரங்களைக் கொண்ட நன்கு பண்படுத்தப்பட்ட 17¾ பரப்புள்ள தோட்டக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.*

தொடர்பு முகவரி:
திருமதி த.பொன்னம்பலம்
C/O R.P. Master
மூத்த விநாயகர் கோயிலடி,
குளங்கரை வீதி. கரணவாய் மத்தி.
கரவெட்டி.

(21-19-18) (30284)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் **அமுதலிங்கம் .திலீபன்**

அவர்கள் 27-03-2004 இல் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் B.A பட்டம் பெற்றதையிட்டு நாம் அகமகிழ்கின்றோம். இவர் மேன் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

தர்சன் தொலைத் தொடர்பகம்
சக நண்பர்கள்.

சங்கத்தானை. சாவகச்சேரி.

(30282)(21-19-18)

ஐங்கரன் துணை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய
மஹோற்சவகுருவும் சமாதான நீதிவானுமாகிய
**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்** அவர்கட்கு
(புன்னாலைக் கட்டுவன்)
யப்பான் பல்கலைக்கழகத்தினால் தகுதிகாண் நுண்ணறிவுக்கான
(ஆய்வுக்கட்டுரை)
**கலாநிதி (Doctor) பட்டம்**
*பெற்றதையிட்டு அவர்தம் சேவை மேலும் சிறக்கவும் வாழ்வு வளம் பெருகவும் ஆயாக்கடவை ஐங்கரனை வேண்டிநிற்கின்றோம்.*

சோ.பாலகிருஷ்ணசர்மா
*(பிரதமகுரு. ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம்).*
பா.சுந்தரராஜ சர்மா தம்பதியினர்,
தி.சோமநாதசர்மா தம்பதியினர்,
சி.கிருஷ்ணசாமிக்குருக்கள் தம்பதியினர்.

(30273)

## உளமார மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்

எங்களது அன்புக்குரிய பாசமிகு நண்பர்கள்



செல்வன்
**கதிர்காமநாதன் தினேஸ்குமார்**
B.B.A.(Hons)



செல்வன்
**இராசரத்தினம் தவகுமாரன்**
B.B.A.(Hons)



செல்வன்
**தெட்சணாமூர்த்தி கீதாம்பரன்**
B.B.A.(Fm Spl.)

*ஆகிய மூவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 27.03.2004 சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்றதையிட்டு நாங்கள் உளமார மனம் மகிழ்ந்து நிறைவோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்கள் கல்வியில் மேன்மேலும் உயர்வுகள் பெற்று வாழ்வில் சிறப்புற வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.*

நட்புரிமையோடு வாழ்த்துவோர்:
அ.க.இராசரத்தினம் குடும்பத்தினர்,
ஆர்.எஸ்.கிராபிக்ஸ் & பிறிண்டேர்ஸ்.

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.
T.P. 021 222 5413.

(30276)(26-21-19-18)


யாழ்.மாவட்டம் - 2004

# இனஐக்கியத்திற்கும், நிரந்தர சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும்



ஐக்கிய தேசிய முன்னணியை மீண்டும் ஆட்சிப்பீடமேற்றி தற்போது அந்தரத்தில் நிற்கும் சமாதான முயற்சியை மீண்டும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு அளிக்கும் வாக்காகும்.

மரச்சின்னத்திற்கு அளிக்கும் வாக்கு
உங்களுக்கே!

உங்களின் ஆதரவை நாடும்

# சுபியான் மௌலவி

X 2

# கடவுளே


## என் மகன் திரும்பவும் எப்ப வருவானோ?

அன்று



யுத்தத்தோட கொடும யுத்தத்தால பாதிக்கப்பட்ட வடகிழக்கு சனம் எமக்கு தான் தெரியும். மக்கள் அகதிகளாயினர். குடும்பத்தோட அனாதைகளாயினர். ரெண்டு கண்ண போல வளர்த்த என்னோட மகன தொலைச்சிட்டு நானும் அனாதையாய் தான் இருக்கிறேன். என் மகனும் நல்லா படிச்சு சமூகத்துல பெரிய ஆளா வரனும்னு ஆசைப்பட்டேன். ஆனா யுத்தம் என்னோட அந்த எதிர்பார்ப்பை கலைச்சி என் மகனையும் காணாமல் போன லிஸ்ட்டுல சேர்த்திடுச்சு.

இன்று



ஆனா, கடந்த ரெண்டு வருஷமா கடை பிடிக்கிற யுத்த நிறுத்தம் காரணமா என் மகன் திரும்பவும் வருவான் என்ற நம்பிக்க தோன்றிருக்கு. அதற்காக தான் நாம் நிலையான சமாதானத்த வேண்டுகிறோம். நிலையான சமாதானம் தோன்ற உழைக்கும் ஐதேகட்சிக்கு எமது ஆதரவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எமது ஆசிர்வாதத்தயும் தெரிவிக்கனும்.



நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.



## ஸ்கிறீன் பிறிண்டிங்
(சுயதொழில் பயிற்சி)

Master by: **K.Seetharaman**

**குறைந்த முதலீட்டில் சகலவிதமான அச்சுவேலைகளையும் செய்வது எப்படி? அறிந்து கொள்ள அரியதோர் சந்தர்ப்பம்**

▲ திருமண அழைப்பிதழ்கள், நோட்டீஸ், விசிற்றிங்காட், ஸ்ரிக்கர், பில் புத்தகங்கள் என்பன அச்சிடுதல்
▲ துணிகள், பொலித்தீன் என்பவற்றில் அச்சிடுதல்
என்பன மிக இலகுவாகவும் தெளிவாகவும் கற்பிக்கப்படும்.
(ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாம். வயது வரம்பேதும் இல்லை)

வகுப்புகள் ஏப்ரல் 19. 20. 21 ஆகிய மூன்று தினங்களில் நடைபெறும்.

*முன்பதிவுகளுக்கு:*

**வெப்சைட் பதிப்பகம்**
மாதா கோயில் அருகில்,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.
Phone: 077-6257876.

**அஞ்சலா மெடிக்கல் சென்ரர்**
இல.01, நவீன சந்தை,
அச்சுவேலி.

**அறுரா வீடியோ**
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

(30268)(26-11-13-31)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 | 02 |
| 08 | 03 |
| 1918 | 2004 |

**அமரர் வேலுப்பிள்ளை இராசையா**

கடந்த 02.03.2004இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் சபிண்டீகரணக்கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (01.04.2004) வியாழக்கிழமை காலை 7.00மணிக்கு அன்னாரது கரணவாய் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*'உதயசாந்தி இல்லம்',*
*கரணவாய் தெற்கு*
*கரவெட்டி.*

*- பிரிவால் துயருறும்*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி-33832)(38-13-11-31)

## தந்தை செல்வா நினைவு வழிபாடு

வலி.வடக்கு,மார்ச்31

தந்தை செல்வாவின் 106ஆவது பிறந்த தின நினைவு கூரல் வழிபாடு யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படவுள்ளது.

சுண்டிக்குளி சென்.ஜோன்ஸ் ஆலயத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு இந்த வழிபாடு இடம்பெறவுள்ளது.

தென் இந்தியச் திருச்சபைப் பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் 'தந்தை செல்வாவின் வாழ்வும் பணியும்' என்ற பொருளில் நினைவுரை ஆழ்த்தவுள்ளார். (ஒ-86)

## நீதிமன்றுக்கு போதையில் வந்தவர் தடுப்புக்காவலில்!

தென்மராட்சி,மார்ச்31

வழக்கொன்றின் விசாரணைக்கு சாவகச்சேரி நீதிமன்றுக்கு வந்த நபர் ஒருவர் மதுபோதையில் இருந்தார். அதனால் அவரை மூன்று தினங்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

நீதிமன்றினை அவமதித்த குற்றத்தின் பேரிலேயே ஏப்ரல் முதலாம் திகதி வரை அந்த நபர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். (ஒ-117)

## கள்ள நோட்டுக்கள் பிடிபட்டன; 3பேர் கைது!

பண்டாரவளை நகரில் போலி ஆயிரம் ரூபா நோட்டுக்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பொலீஸார் மீட்டனர். இதுதொடர்பாக சந்தேகத்தின்பேரில் 3 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கணனி நிறுவனமொன்றை சுற்றிவளைத்த பொலீஸார் அங்கிருந்து ஆயிரம் ரூபா போலி நோட்டுக்களையும், போலி நோட்டுக்கள் அச்சிடப்பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களையும் கைப்பற்றினர்.

அங்கிருந்த மூன்று பேரை சந்தேகத்தின்பேரில் பொலீஸார் கைது செய்தனர். (ஒ-ரி)

உ



ஓம் நமோ நாராயணாய!

## மாமுனை ஸ்ரீநாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் தின உற்சவம்

*எம்பெருமான் அடியார்களே!*

எதிர்வரும் 04-04-2004 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர நன்னாளில் பொங்கல் தின விசேட பூசைகள், உற்சவம் என்பன நடைபெறவுள்ளன.

*அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!*

*மாமுனை,*
*செம்பியன்பற்று.*

தலைவர்,
ஆலய பரிபாலன சபை.

(30265)(13-11-31)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

*31-03-2004*



ஆனைப்பந்தி - நாவலர் வீதி,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
திரு.சிவராஜசேகர் (சிவா) திருமதி குமுதினி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

**தரங்கிணி**

அவர்களின் இன்று (31.03.2004) புதன்கிழமை வரும் முதலாவது பிறந்தநாளில் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சசிதா (மச்சாள்),
கஜேந்திரன் (மச்சான் - பாறின்),
நவலட்சணா (அத்தை),
துவாரகன் (அண்ணா),
புருஷோத் (அத்தான்)
மற்றும் உற்றார், உறவினர்கள்.

320/5, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.


(30193)(26-11-13-31)


## புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

## SHAN MULTY TRADE CENTRE

SONY, NATIONAL, T.Vகள் (14", 19", 20", 21", 25", 29", 34",)
VIDEO DECK, SONY, TECHNICS, KENWOOD, PIONEER
செற்றப் றேடியோக்கள், AMPLIFIERS, (PIONEER, KENWOOD, YAMAHA, DENON, SANSUI, MARANIZ), புறயெக்ரர் என்பனவும் அதற்குரிய உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

(அனைத்தும் ஒறிஜினல் JAPAN)



No.50, K.K.S. ROAD,
JAFFNA. T.P.: 222 7442.

(30061)(39-11-13-31)

அடக்கி ஒடுக்கப்படும் எம்மினத்திற்கு

அரசியல் நீதி கோரிய காரணத்தால்

சிங்களச் சிறைகளில் சிக்கிக் கிடக்கும்

எம் உடன் பிறப்புக்கள் பலருக்காக......




# ஸ்ரீலங்கா நீதிமன்றங்களில்

சட்ட நீதி கோரி

ஆக்ரோஷமாக

ஒலித்துக் கொண்டிருக்கும் குரல்

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலும்

எம்மினத்தின் உணர்வலைகளை

உறுதியுடன் எதிரொலிக்கட்டும்!


# நினைவிருக்கட்டும்

# இலக்கம் 2

# வீட்டுச் சின்னத்தில்

# சிறீகாந்தா



X

2

# ...ாளை மறுதினம் பொதுத் தேர்தல்: வாக்...

## ...ரித்திரம் படைக்க வாக்களியுங்கள் ...ரலாற்றை எழுத ஒன்றிணைவோம்



இன்னும் இரு தினங்களில் நடைபெறவிருக்கும் 13ஆவது பொதுத் தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் நடைபெறும் தேர்தலாகும். இந்த நாட்டில் தமிழ் மக்களின் எதிர்காலத்தை மிக உறுதியாக எழுதப்போகும் தேர்தல் இதுவாகும்.

சுதந்திரமாக வாக்களிப்பது எல்லா மக்களுக்குமான ஒரு ஜனநாயக உரிமை. இந்த உண்மையை சரியான விதமாகப் ...பன்படுத்த வேண்டிய கடமை எல்லோருக்கும் உண்டு. தமிழ் மக்...ள் இந்தப் பொன்னான வாய்ப்பை நழுவவிடாமல் அனைவரும் நேர்மையான வாக்களிப்பில் ஈடுபடவேண்டும். போரை அல்ல அமைதியையும் சமாதானத்தையுமே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்பதை முழு சர்வதேச உலகிற்கும் வெளிக்காட்ட தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சரித்திரம் படைக்க வாக்களிப்பில் ஈடுபடவேண்டும் என விரும்புகிறோம். யாரும் வாக்களிப்பில் ஈடுபடாமல் இருக்கவேண்டாம். குறிப்பாக இடம்பெயர்ந்தவர்கள் விசேட வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டி இருப்பதனால் இச்சிரமங்களைக் கண்டு பின்வாங்காமல் இவ்விடங்களுக்குத் தவறாமல் சென்று வாக்களிப்பில் ஈடுபடவேண்டுகிறோம்.

வாக்குகளை அளிக்கும்போது தேசிய நலனை கருத்தில் கொண்டு தகுந்த பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பதை மறந்துவிடவேண்டாம். தமிழ் மக்கள் அனைவரும் அரசைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள இவ்வேளையில் எமது வரலாற்றை நாமே எழுத உறுதியாக ஒன்றிணைவோம். சமாதானத்தின் பாதையை முன்னெடுத்துச்செல்லும் ஆணையைத் தெரிவு செய்யப்பட்ட அரசிற்கு வழங்க இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம். யுத்தத்தை வெறுத்துச் சமாதானத்தை மீளக்கொண்டுவரும் தமிழ் மக்களின் விருப்பம் இத்தேர்தல் மூலம் தெளிவாக தெரியப்படுத்தப்படவேண்டும். இதற்கு உரிய விதமாகதூர நோக்குடனும் துணிவுடனும் நாம் செயற்படவேண்டும்.

எதுவித வற்புறுத்தலுமின்றிச் சுதந்திரமாக மக்கள் வாக்களிக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும். அதிகார துஷ்பிரயோகம், ஆள்மாறாட்டம், அரசியல் வன்முறை, பயமுறுத்தல், கள்ளவாக்கு போன்ற தவறான செயல்கள் நடைபெறாமல் இருப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தவேண்டும். தேர்தலில் வாக்களிக்காதிருத்தல், சரியான மனத்தெளிவின்றி வாக்களித்தல், முறையற்ற வாக்களித்தலில் பங்குகொள்ள முற்படல் என்பன எல்லாம் ஜனநாயக தேர்தல் வழிமுறைகளுக்கு ஒவ்வாதவை. வன்முறைகளற்ற தேர்தலாக இத்தேர்தல் அமைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டி நிற்கிறோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.
யாழ். ஆயர்.

## நீங்களாகவே விலகிக்கொண்டு சர்வதேசத்தை வியக்க வையுங்கள்

தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, விடுதலைப் புலிகளே எமது ஏக பிரதிநிதி ஆகிய தமிழ் மக்களது அபிலாசைகளை சர்வதேசமெங்கும் பறைசாற்றும் தினமாக எதிர்வரும் ஏப்ரல் 2 நாடாளுமன்றத் தேர்தல் தினம் அமையவேண்டும்.

தமிழ் மக்களின் இந்த அபிலாசைகளுக்கு முரணாகச் செயற்படும் தமிழ்ச் கட்சிகள் தாமாகவே முன்வந்து தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்குவதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையுடன் வெளிப்படுத்தின என சர்வதேசமும் வியக்கும் வண்ணம் தெரியப்படுத்துமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.


யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.

## ஒற்றுமையைக் காட்ட... இன்றியமையாக் கடமை...



ஜனநாயத்தின் அத்திவாரமே மக்களின் வாக்களிக்கும் உதயம்தான் நாளைமறுதினம் நடைபெறவுள்ள தேர்தல் வாக்களிப்பதன் அவசியத்தை மிகவும் செயல்வடிவமாக பிரதிபலிக்க உள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் அரசியல், வாழ்வியல் அபிலாசைகளை அகில உலகத்துக்கும் எடுத்துக்கூறவுள்ள தேர்தலாக அமைகிறது. உரிமைகளைப் பெறுவதில் எமது மக்கள் தமது ஒற்றுமையை ஓரணி திரண்டு காட்டவேண்டிய

## நோக்கங்களை நிறை... வாக்காளன் பலம்...



நாட்டில் உள்ள சகல மக்களும் வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்த வேண்டும். அதிலும் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை, இலட்சியத்தை நிறைவேற்ற நூற்றுக்கு நூறு வீதம் வாக்களிக்க வேண்டும். தமிழர்கள் தமது அபிலாசைகளை சகல தரப்புக்களுக்கும், சர்வதேசத்துக்கும் வாக்களிப்பதன் மூலம் தெரியப்படுத்த வேண்டும்.

வாக்கு அவனது பலம். அத்தகைய பலமுள்ள வாக்கை அளிப்பதன் மூலம் தனது நோக்கங்களை நிறைவேற்றும் குழுவுக்கு பலம் சேர்க்கின்றான்.

ஆகவே, நேரத்துடன் காலை 7 மணிக்கே வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று சகலரும் வாக்களிக்கவேண்டும். காலையில் 'கியூ' என்று இருக்காமல் காலையே சென்று வாக்குகளை அளிக்க வேண்டியது அவசியம்.

யாழ். பல்கலைக்கழக சமூகம் தேர்தலில் எப்படிச் செயற்படுவது என்று முடிவுசெய்து அந்த அடிப்படையில் செயற்பட்டு வருவதை அவதானிக்கிறேன். கொள்கையையும், இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டு அவர்கள் வாக்களிப்பர்.

இரத்தக்களரியோ, வன்செயல்களோ இன்றி வாக்களிப்பும் தேர்...

## மக்கள் மன்றம்↓

# தமிழர் அபிலாசைகளை ஒ... போட்டியிலிருந்து விலகி நி...

## ...மிழர்கள் ஒரே அணியில் தெரிவாக உதவுங்கள்: ...தர்தலில் இருந்து விலகி மதிப்பைப் பெறுங்கள்

...மிழ் மக்கள் ஒன்று பட்டு ஒரே அணியில் நின்றிருந்தால் தம்... தாமே ஆளுகின்ற தன்னாட்சி உரிமையை என்றோ கைவச... இருக்க இயலும். ஆனால், எங்களின் பல தலைமுறைகளில் ... இயலாத காரியமாகிவிட்டது. ஒற்றுமையே பலம் என்பதனை ... செயற்பட்டதின் விளைவை அனுபவித்துத்தானே ஆகவேண்டும். ...துவரைவிட்ட தவறினை இப்போதும் செய்யாவிடில் தமிழர் ... அரசியல் 'சுவைகெட்டுப் போய்விடும்' என்று எண்ணுவோர் ...மும் இருக்கவே செய்கிறார்கள்.

...து நமது சமூகத்தின் பெரும் சாபக்கேடு என்று வெறுமனே ...ல்வதால் பயன் இல்லை. அவர்களை இனங்கண்டு புறந்தள்ள ...ண்டிய வேளை இது. ஆம், அதுதான் இந்தத் தேர்தல் வேளை ...வே அதற்கு நல்ல சகுனமும் தருணமும் ஆகும்.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள (பதின்மூன்றாவது) நாடாளு...த்தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு வரலாற்...ர்தல். ஈழத்தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை மற்றும் ...யல் அபிலாஷைகளை, ஜனநாயக ரீதியாக வலுச்சேர்த்து ...த்து உலகத்துக்கும் உறுதிபடக் கூறுவதற்கான பெரும் ...பான தேர்தல்.

...ந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ...மையாகவும், நேர்மையாகவும் முன்னெடுக்கும் அணி தமிழர் ...க் கூட்டமைப்பே. கூட்டமைப்பின் வேட்பாளர்களே தமிழீழம் ...ந்தும் அதிக எண்ணிக்கையில் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு ...ச்சமாகத் தெரிகிறது.

...வ்வறிகுறியில், கூட்டணியின் தலைவர் பதவியை தன்னுடனேயே ...திருக்கும் ஆனந்தசங்கரி ஐயா -

...ழ்மக்களின் ஒற்றுமையை குலைக்கும் நோக்குடன் சுயேச்சை ... ஒன்றை முன்னிறுத்திப் போட்டியிடுவது கூட்டணியையே ... வருடகாலமாக ஆதரித்து வாக்களித்து வரும் எங்களைப ...ன்றவர்களின் மனங்களை நெருடுகிறது.

ஐயாவுக்கு தனிப்பட்ட முறையில் பல நலன்களும் சொகுசு வசதி...ம் கிடைக்கக்கூடும். அதற்காக அவர் குடாநாட்டு மக்களை அர...யல் தெரியாதவர் என்று எண்ணுவது விளங்காத்தனமும் விவேக...ற தன்மையுமே அன்றி வேறில்லை.

தமிழீழ மக்களையும் தமிழீழ மக்களின் அரசியல் நடவடிக்கைகளையும் குழப்பியடித்து தோல்வி அடையச்செய்யலாம் என்று ...வர் நினைக்கக்கூடும். ஆனால், மக்கள் அதற்கு எடுபடமாட்டார்கள் என்பது நிச்சயம். எனவே அவர் இத்தகைய செயல்களை நிறுத்தி தமிழர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொண்டால் -

வேறு எப்போதும் இல்லாதவாறு தமிழ் மக்களுக்குப் பேருதவியும் பெருஞ்சேவையும் செய்தவராகக் கருதப்படுவார். ஒரு மூத்த அரசியல் தலைவர் என்ற மதிப்பை மக்கள் அவருக்கு நிச்சயம் வழங்குவர்.

ஆனந்தசங்கரி ஐயாவுக்கு யாழ்ப்பாண மக்கள் சார்பில் இந்த நியாயமான வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றேன்.

நல்லூர் க.லவேசன்

## நல்லூர் தமிழ் மக்கள் முட்டாள்கள்அல்லர்!

மதிப்புக்குரிய திரு.ஆனந்தசங் கரி அவர்களுக்கு!

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இலங்கை நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக இருந்தவர் என்ற வகையில் பெருமையைப் பெற்றுள்ளீர்கள். இலங்கையின் மூத்த அரசியல் வாதிகளில் ஒருவர் என்ற பெருமையும் தங்களுக்கு உண்டு.

ஆனாலும், இவ்வளவு காலமும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் உங்களால் ஏதாவது சாதிக்க முடிந்ததா? இக்காலப்பகுதிகளில் எல்லாம் சிங்களப் பேரினவாதிகள் உங்களையும், உங்களுக்கூடாக எங்களையும் ஏமாற்றி வந்திருப்பதை நீங்களே பலதடவை ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். இருந்தும்கூட இன்று எச்சில் சோற்றுக்கும் எலும்புத் துண்டுக்கும் ஆசைப்பட்டு பேரினவாதிகளிடமிருந்து பணத்தை பெற்றுவந்து பொய்ப் பிரச்சாரங்களை பத்திரிகைகளில் விளம்பரமாக செய்து வருகிறீர்கள்.

இவற்றைப் பார்த்து நாற்பது வருடங்களில் உங்களால் சாதிக் முடியாமல் போனவற்றை இந்த முறை சாதிப்பீர்கள் என நம்பி உங்களுக்கு வாக்களிக்க எமது மக்கள் நீங்கள் நினைப்பதுபோல முட்டாள்கள் அல்லர் என்பதை உணருங்கள். உணர்ந்தும் இருப்பீர்கள் என்பது எமக்குத் தெரியும்.

இதுவரை காலமும் நீங்கள் செய்த துரோகத் தனங்கள் எல்லாம் எமது மக்களுக்கு நன்கு தெரியும். எனினும் உங்களை எங்கள் இனம் மன்னிக்க வேண்டுமாயின் விடுத லைக்கு வலுச்சேர்க்கும் கொள்கைக்கான இத்தேர்தலுக்கு குறுக்கே நிற்காது விலக்கிக் கொள்ளுமாறு தமிழ் மக்கள் சார்பில் தங்களிடம் வேண்டிநிற்கிறோம்.

சர்வதேச தமிழ் மாணவர் பேரவை.

## நீங்கள் மட்டும் விரோதமாகச் செயற்படுவது வேதனை தருகிறது

ஈழத்தமிழர்களின் துரோகிகள் பட்டியலில் மீண்டும் தன்னை மெல்ல மெல்ல நுழைத்துக்கொள்ள முற்படும் ஆனந்த சங்கரி ஐயா அவர்கட்கு எமது சங்கத்தின் சார்பாக விடுக்கும் பகிரங்க மடல் இது!

தமிழ்த் தேசியத்தின் பின்னால் மக்கள் அனைவரும் ஒரு குடையின்கீழ் அணிதிரண்டு நிற்கின்றார்கள் என்பதை உலகிற்குப் பறைசாற்றப் போகும் பொன்னான தருணம் இது. மக்களின் ஒருமித்த கருத்தை, அபிலாஷைகளை, விருப்பங்களை சர்வதேசத்தின் செவிப்பறைகளுக்கு அடித்துக்கூறி நியாயம் கேட்பதற்கு அரியதொரு வாய்ப்புக் கிடைத்திருக் கின்ற இந்த நேரத்திலே நீங்கள் மட்டும் அதற்கு விரோதமாகச் செயற்படுவது எமக்கு வேதனையளிக்கிறது.

தமிழ் மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்ட டக்ளஸ் தேவானந்தாவையும், அவரது ஈ.பி.டி.பியினரையும் துணிச்சலுடன் நிமிர்ந்து நின்று கண்டித்த நீங்கள் இன்று டக்ளஸின் அதேபாதையில் சென்றுகொண்டிருப்பது நியாயமானதா?

ஈ.பி.டி.பியிடம் இருந்து அச்சுறுத்தல் இருப்பதாக நீங்கள் கூறியபொழுது உங்களுக்கு தமிழ் மக்கள் பாதுகாப்பளித்தார்கள். ஆனால், இன்று உங்களுடைய துரோகத்தனத்தால் மக்களிடமிருந்தே அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றீர்கள்.

எனவே இந்த நிலையை உணர்ந்துகொண்டு நீங்கள் தேர்தலில் இருந்து விலகிக்கொள்வதன் மூலம் தமிழர்களின் துரோகிகள் பட்டியலில் இருந்து விலக்கிக்கொள்ள முடியும். அத்தோடு மக்களே உங்களுக்கு கவசமாக இருக்கக்கூடிய நிலை மீண்டும் உருவாகும்.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம்.

## இனத்தின் ... ஒத்துழைய...

ஆனந்த சங்கரி அவர்கட்கு!

தமிழ் மாணவர்கள் சார்பாக தமிழ் மா... அன்பான வேண்டுகோள் இது. நீண்டகா... சொந்த மண்ணை விட்டு ஏதிலிகளாக ... சமாதான காலங்களில் கூட தமது சொந்... முடியாமல் அவல வாழ்க்கை வாழ்ந்...

இந்த நிலை இன்றும் தொடர்வதற்கு ... இருப்பவர் இந்நாட்டின் ஜனாதிபதிதான் ... அப்படி இருக்கையில் நீங்கள் சந்திரிகா ... புக்குள் இருந்து கொண்டு அவரின் திட்... காக தேர்தலில் நிற்பதை இட்டு நாம் ... ஒற்றுமையை சிதைக்கும் வகையில் தேர்... கிறீர்கள். உங்களின் இந்த நடவடிக்கைக்... இருப்பதாகத் தாங்கள் காட்டிக்கொள்ள ... கின்றோம். எனவே, தயவுசெய்து இந்தத்... டியாக விலகி எமது இனத்தின் விடிவுக்கு ... வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ் மாண...

# க்காளர்களே தவறாது வாக்களியுங்கள்

## ட்டவேண்டிய தேர்தல்; மையை இனிதே செய்யுங்கள்

தேர்தல் இது. அதனை உணர்ந்து ஒவ்வொரு வாக்காளரும் தமது கடமையைத் தவறாது செய்யவேண்டும்.


தேவையற்ற சம்பவங்களை விடுத்து, அமைதியான முறையில் வாக்களிப்பு நடத்தேற ஒவ்வொரு வரும் உதவுங்கள். உங்கள் இன்றியமையாத பணியை இனிதே செய்யுங்கள். அமைதி பேணி வாக்களியுங்கள். தமிழர்கள் நாம் ஒரே அணியில் ஒன்று திரள்வோம்" என்பதை தென்னிலங்கைக்கும் உலகுக்கும் எடுத்துச் சொல்லுங் கள். இதனைவிடச் சிறந்த வழி எதுவுமே இல்லை.

இந்த அரிய வாய்ப்பை தக்கவாறு பயன்படுத்துங்கள். எங்கள் மண்ணும், மக்களும், மொழியும் சமயமும் புத்தெழுச்சிக் கான கால்கோல் இடுங்கள்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நல்லை ஆதீன முதல்வர்.

## ஒற்றுமையின்மை பலவீனப்படுத்தும்; அதனை உணர்ந்து வாக்களியுங்கள்



2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் இலங்கை வாழ் தமிழ் மக்கள் வரலாற்றிலே ஒரு முக்கிய மான மைற்கல் ஆகும். அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூடைபோல் இருந்த தமிழ் இனத்தை ஒற்று மைப்படுத்தி அதனை மாபெரும் சக்தியாக்கினார் தந்தை செல்வா. இன்று தமிழர் ஒற்றுமைக்குப் பல வித சவால்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றைக்கண்டு சோர்ந்து போகாமல் ஒற்றுமையைக் காப் பதுதான் எமது தலையாய கடமை. இந்தத் தேர்தலை உலகம் முழுவதும் உன்னிப்பாகக் கவ னித்துக் கொண்டிருக் கின்றது. நமது ஒற்றுமையின்மை சர்வதேச அரங்கில் நம்மைப் பலவீனப்படுத்திவிடும். தந்தை செல்வாவின் இலட்சியக் கனவு, பொய்யாய், பழங்கதையாய், கனவாய் மெல்லப் போய்விடாமல் அனைவரும் வாக்களிக்கவேண்டும். தமிழ் மக்கள் ஒரே குரலில் பேசும்படி செய்தல் வேண்டும்.

எஸ்.ஜெபநேசன்.
தந்தை செல்வா அறங்காவற் குழுத் தலைவர்.
தென்னிந்திய திருச்சபைப் பேராயர்.


## றைவேற்றும் குழுவுக்கு ம் சேர்க்கவேண்டும்

தலும் இடம்பெற வேண்டும். இதுவே அனைவரது பிரார்த்தனை யுமாகும்.

சு.மோகனதாஸ்
துணைவேந்தர். யாழ். பல்கலைக்கழகம்.

## மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் தலைவர்களையே தெரிவு செய்யுங்கள்

தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல எமது தேசத்திற்கே நடைபெற இருக்கும் தேர்தல் மிகமுக்கியமானதாகும். இன்று எமது தேசத்தின் நிலையில் எமது தேசத்தை கட்டியெழுப்ப மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்யும் தலைவர்களை மக்களே தெரிவுசெய்ய வேண்டும்.




சகலரதும் வாக்குரிமைகள் ஜனநாயக ரீதியில் பேணப்பட வேண்டும். இத் தேர்தலின் மூலம் யுத்தம் ஒழிக்கப்பட்டு மக்கள் விரும்பும் நீதியுடனும், சமத்துவத்துடனும் கூடிய சமாதானம் எம் தேசம் முழுவதும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

எந்தவித அடக்குமுறை களோ, திணிப்போ, பயமோ அன்றி மக்களின் வாக்களிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசியல் வன்முறைகள், பலாத்காரப் பழிவாங்கல்கள் நடைபெறுவதை மக்கள் தடுக்க முன்வரவேண்டும். மக்கள் தங்கள் வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்த தீர்மானிக்க வேண்டும்.

அன்பும், நட்புறவும், தோல்வி, வெற்றி ஏற்றுக்கொள்ளும் மனோபலம் தேர்தலின் முன்பும், பின்பும் யாவரது உள்ளத்திலும் காணப்படவேண்டும்.

வண.செ.பி.நேசகுமார்.
யாழ். குருமுதல்வர்.
இலங்கைத் திருச்சபை.

## இலக்கை எய்தக்கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு வாக்களியுங்கள்



மக்களின் ஜனநாயகம், சுதந் திரம், அபிலாஷைகள், அபிவி ருத்தி ஆகியவற்றை முதன் மைப்படுத்தி போட்டியிடும் வேட் பாளர்களுக்குத் தமது வாக்குக் களை மக்கள் அளிக்க வேண்டும்.

மக்கள் தமது அபிலாஷை களை, உரிமைகளை வென்றெ டுக்க, சர்வதேச சமூகத்தினரிடம், எமது ஏகோபித்த பிரதிநிதிகள் யார் என்பதை வெளிப்படுத்த இத் தேர்தலைப் பயன்படுத்த வேண் டும். கொள்கைக்காக நடக்கும் இத்தேர்தலில் தமது வாக்குக் களை இட்டு, இந்த இலக்கை எய்தக் கூடிய வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யவேண்டும். அதனை மனதில்கொண்டு வாக்களியங்கள்.

இன்றுள்ள சூழ்நிலையில் சமாதானத்தை நோக்கிய பாதை யில் அடியெடுத்துச் செல்லும் வேட்பாளர்களுக்கு வாக்களித்து சமா தானம் நிலைபெற உதவவேண்டும்.

சர்வதேசமும், தெற்கும் கண்விழிக்கக்கூடிய முடிவை மக்கள் அளிக்க வேண்டும். அப்போதுதான் எமக்கு விடிவுகாலம் பிறக்கும்.

ஐ.மகேஸ்வரக் குருக்கள்.
இந்து மத பீடாதிபதி.

# ஒரே குரலில் வெளிப்படுத்த நில்லுங்கள் சங்கரி ஐயா!

## சுயேச்சையாக நின்று சாதித்துவிட முடியாது

மதிப்பிற்குரிய ஆனந்தசங்கரி ஐயா அவர்கட்கு!

தமிழர்களின் விடியலுக்காய் இம்முறை பொதுத்தேர்தலில் தாங்கள் போட்டியிடுவதாக அறிவித்திருக்கிறீர்கள். தமிழர்களின் விடியலுக்காகப் போராடப்புறப்பட்ட பல அமைப்புகள் இன்று ஒன்றி ணைந்து தமிழரசுக்கட்சியின் சின்னத்தின்கீழ் தேர்தலில் போட்டியி டுகின்றன. இந்த நிலையில் தாங்கள் தனித்து நின்று அதுவும் சுயேச் சைக் குழுவாக நின்று நிச்சயமாக எதுவும் சாதித்துவிடமுடியும் என்று நாம் கருதவில்லை.

தமிழ் மக்கள் தாம் இழந்துவிட்ட உரிமைகள் அனைத்தையும் திரும்பவும் பெற்று சுதந்திரமக்களாய் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதென்றால் ஒன்றுசேர்ந்து போராடுவதே நியாயம்.- அவ்வாறு செய்வதன் மூலம் சிறிய அளவிலாவது நாம் ஏதும் பெற்றுக்கொள்வது சாத்தியமாகும். அதைவிடுத்து தமிழர் தலைவர்களில் ஒருவராகிய தாங்கள் விடாப்பிடியாக தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது எந்தவகையிலும் தமிழ் மக்க ளின் இலட்சியங்களை வென் றெடுக்க உதவும் என்று சொல்ல முடியாது.

தமிழ் மக்கள் மத்தியில் என் றுமே தங்களுக்கு ஒரு மதிப் பும் மரியாதையும் இருந்துவரு கிறது. மாசுமறுவற்ற அந்த மதிப் பையும் மரியாதையையும் தாங் கள் மேலும் அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். எனவேதான் இந்தத் தேர்தலில் போட்டியிடு வதிலிருந்து தாங்கள் வாபஸ் பெற்றுக்கொண்டு தமிழர் தாய கத்தின் இலட்சியம் நிறைவேற உதவவேண்டும் என்று கோருகின் றோம். அவ்வாறு செய்வது தமி ழர் வரலாற்றில் தங்களுக்கு நிரந் தரமான ஓர் இடத்தைப் பெற்று தரும் என்று கூறுவதில் மகிழ்ச்சி படைகின்றோம்.

தமிழ்த் தேசிய
விழிப்புணர்வுக் கழகம்.

## விடிவுக்கு ழயுங்கள்

கட்கு!

மிழ் மாணவர் ஒன்றியம் விடுக்கின்ற
ண்டகாலமாக எமது மக்கள் தமது
களாக அலைந்து திரிகிறார்கள்.
சொந்த இடங்களில் மீளக்குடியமர
வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
தற்கு முக்கிய காரண கர்த்தாவாக
தான் என்பது தாங்கள் அறிந்ததே.
திரிகா அம்மையாரின் அரவணைப்
ன் திட்டத்தினை செய்து முடிப்பதற்
நாம் வருந்துகின்றோம். தமிழரின்
ல் தேர்தலில் தாங்கள் போட்டியிடு
க்கைக்கு எமது மக்களிடம் ஆதரவு
காள்ள முயற்சிப்பதை அவதானிக்
இந்தத் தேர்தலில் இருந்து உடன
டிவுக்கு ஒத்துழைக்கும்படி அன்பாக

ழ் மாணவர் ஒன்றியம். யாழ்.மாவட்டம்.

## பேரினவாதத்தின் சதிவேலைக்கு கதவடைக்கவேண்டும்

மதிப்பிற்குரிய ஆனந்த சங்கரி ஐயாவிற்கு!

தேர்தலுக்கு இன்னமும் இரண்டு நாள்கள் தான் இருக்கின்றன. இந்த வேளையில் உங்களுக்குச் சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். சுமார் 25 வருடங்களுக்கு மேல் இந்த நாட்டில் தொடர்ந்த ஆயுதப் போராட்டம் இன்று முடிவுக்கு வந்திருக் கின்றது. தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலம் பெற்று வெற்றிகளைக் குவித்து, அதன் மூலம் சமாதான வழிக்குத் தென்னிலங்கையை இழுத்துவந் திருக்கிறார்கள். இப்போது விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ரீதியில் மக்கள் பலம் இருக்கிறது என்பதையும் நிரூபிக்க வேண்டிய தேவை ஒன்று வந்திருகிறது. தமிழ்க் கூட்டமைப்பின் வெற்றிதான் அதனை நிரூபிக்கப் போகிறது. இந்த நிலையில் அந்த வெற் றியை கூறு போடத்திட்டம் போட்ட பேரினவாதிகள் அதற் காக உங்களைப பயன்படுத்து கிறார்கள். இந்த உண்மை யைப் புரிந்து கொண்டு உடன டியாகத் தேர்தலில் இருந்து விலகி பேரினவாதிகளின் சதி வேலைக்கு நீங்கள் கதவ டைக்க வேண்டும். அதன் மூலம் எமது இனத்தின் இன்னுமொரு காக்கைவன்னியன் என்ற பட் டத்திலிருந்து நீங்கள் தப்பித் துக் கொள்வீர்கள.

கட்சியைக் காப்பாற்ற வேண் டும் என்ற ஒன்றையே தாரக மந்திரமாகக் கொண்டிருக்கின்ற உங்களுக்கு இனத்தைக் காக்க வேண்டும் என்ற சிந்தனை சிறி தும் இல்லாமல் போனது துரதிர்ஷ் டம்தான் இப்போதாவது உணர்ந்து கொள்வீர்கள் என்றும் நம்பு கின்றோம்.

குருநகர் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்.யாழ்ப்பாணம்.

## தயவு செய்துவிலகுங்கள்

அன்புடன் ஆனந்தசங்கரி ஐயாவிற்கு!

தமிழ் மக்களின் உண்மையான விடுதலைக்காக தனது இறுதி மூச்சு உள்ளவரை துணிந்து குரல் கொடுத்தவர் தந்தை செல்வா. அத்தகைய பெரியவரின் பெயரை உச்சரிப்பதற்கே தகுதியற்ற நீங்கள் உங்கள் சுய அரசியல் லாபத்திற்காக அவரது பெயரை உச்சரிப்பதும் அந்தப் புனிதரின் படத்தோடு சேர்த்து உங்கள் கறைபடிந்த படங்களைப் பிரசுரிப்பதும் எமக்கு ஆச்சரியத்தையே தருக்கின்றது.

ஏனெனில் தனது மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையே பலதடவைகள் இராஜினாமா செய்தவர் தந்தை செல்வா. நீங்களோ எமது மக்களுக்கு எதிராகச் செயற்பட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி யைப் பெறத்துடிக்கிறீர்கள். நாடா ளுமன்றக் கதிரை ஆசைக்காக தமிழ் இனத்தையே விற்று விடத் துடிக்கும் உங்களை தயவு செய்து இத்துரோகச் செயலி லிருந்து விலகிக் கொள் ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

எமது இனத்தையும் விடு தலைப் போராட்டத்தையும் அழிக்க நினைத்த துரோகி களுக்கு எமது இனம் கொடுத்த தீர்ப்புக்களும் தங்களுக்குத் தெரிந்தவையே. எனவே இது வரை செய்த துரோகங்களுக் குப் பிராயச்சித்தம் தேடும் நோக்கோடு இத்தேர்தலி லிருந்து விலகிக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம்.

## வரலாற்றுக் கறையாக இருந்துவிடாதீர்கள்

மதிப்பிற்குரிய ஆனந்தசங்கரி அவர்கட்கு!

தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியத்தின் நலன்கருதி ஒற்றுமைப்பட்டு ஒரே தலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு நிற்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே அந்த ஒற்றுமையைச் சீர்குலைக்கவேண்டும் என்பதற்காக - மக்களின் விருப்பத்திற்குமாறாக - தாங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றமை எமக்கு மிகுந்தமன வேதனையைத் தந்துள்ளது. காலங்காலமாக எத்தனையோ இன்னல்களையும் துன்ப துயரங்களையும் உயிர், உடைமை இழப்புக்களையும் சந்தித்த எங்களுடைய இனம் இன்று அந்த இழப்புக்களுக்கெல்லாம் ஒன்றுபட்ட குரலில் நியாயம் கேட்டுநிற்கிறது.

தமிழர்களின் இந்த ஒற்று மைப் பலத்தைக்கண்டு சிங்களப் பேரினவாத அரசியல் வாதிகள் முதல் சர்வதேச வல்லரசுகள் வரை தமது புருவங்களை உயர்த்தி ஆச்சரியப்பட்டு அதிர்ந்துபோய் நிற்கிறார்கள். இந்த நேரத்திலே தங்களின் கீழ்த்தரமான இந்தச் செயற்பாடு தமிழினத்தின் வர லாற்றில் கறைபடிந்து விட்டதா கவே எண்ணத் தோன்றுகிறது.


ஓர் இனத்தின் மீது படிந்த வரலாற்றுக் கறையாக நீங்கள் இருந்துவிடல் கூடாது என்பதற் காகத்தான் உங்களிடம் கேட்கி றோம் தயவு செய்து இந்தத் தேர் தலில் இருந்து நீங்கள் ஒதுங் கிக்கொள்ளுங்கள்.

எமது இனத்தின் ஒற்று மைக்கு வேட்டுவைத்தவர் என்ற இழிச்சொல் உங்களுக்கு வந்து விடல்கூடாது. இதனை நீங்கள் இறுதிக் கட்டத்திலாவது உணர்ந்து கொண்டு இந்த முறை தேர் தலில் இருந்து உங்களின் தலை மையிலான சுயேட்சைக் குழுவை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண் டும் எனக்கேட்டுக் கொள்கின றோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்

தமிழீழத் தமிழ்மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க
தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை
உலகறியச் செய்த ஒரே ஒரு தேசியப் பற்றாளனும்
சமூக சேவையாளருமான



## சீ. வீ. கே. சிவஞானம்

(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளரும்
விசேட ஆணையாளரும்)

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு
அவரது விருப்பு இலக்கமாகிய
9 இற்கு வாக்களித்து
அமோக வெற்றிபெறச் செய்வோம்!

## இலங்கைத் தமிழரசுக் கட்சி ✕ 9

வண்ணார்பண்ணை& நீராவியடி வாழ் மக்கள் சார்பாக
குமார் ஏஜென்ட் & குமார் A.P.O T.P. : 222 7727, 222 3453



## வளம் நிறை வாழ்த்துக்கள்

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா/த)பரீட்சையில்,
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவி
செல்வி பூஜித்திரேயி தவராசா
9A, C பெற்றுள்ளார். இவர் பல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ எமது வளம்நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

வைரமஹால், வதிரி. அப்பப்பா குடும்பம்,
பாலாமாமா குடும்பம்
(சி-34168) (40-19-18-24)



## பாராட்டி வாழ்த்துகின்றேன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
27.03.2004 சனிக்கிழமை
நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு
விழாவில் முகாமைத்துவமாணி
பட்டம்பெற்றவரான
**பெனிற்றா அந்தோனிப்பிள்ளை யோகராஜா**
B.B.A. (Hons)
அவர்களை நான் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறேன். அவர் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சீரோடுஞ் சிறப்போடும் வாழ ஆண்டவனை வேண்டிப் பணிகின்றேன.

14, மத்திய மேற்கு வீதி,
குருநகர்.
பிரியமுடன்:
நண்பி சுதா.
(30308) (26-19-18-24)



## வெற்றிக்கும் சுகத்திற்கும் பிரார்த்திப்போமாக



**திரு.தியாகராஜா மகேஸ்வரன்**
முன்னாள் இந்துகலாசார அமைச்சர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது தீயசக்திகளின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளார்.

அவர் பூரணமாகக் குணமடையவும் மக்கள் சேவையைத் தொடர்ந்து ஆற்றவும் இத்தேர்தலில் வெற்றிபெறவும இறைவனை வேண்டி எதிர்வரும் 02.04.2004 அன்று இக்கிராமத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் விசேட பூசைகள் நடைபெறவுள்ளன. அனைத்து அடியார்களும் இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கைதடி நாவற்குழி தெற்கு.
கோயிலாக்கண்டி துறை.
இந்து சமய கலாசார
அபிவிருத்திச்சபை - கைதடி.
(30307) (26-19-18-24)


## பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு இயங்குகிறது

தென்மராட்சி,மார்ச்31

பளை வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வைத்தியசாலை வளவில் நேற்றுமுன்தினம் தொடக்கம் இயங்கி வருகிறது.

யுத்தத்தினால் சேதமடைந்த இந்த ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரி விடுதி உலக தரிசன நிறுவனத்தினரால 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.

இக்கட்டடம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ் சத தியமூர்த்தி, கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவைச் சேர்ந்த மணிவண்ணன், பளைப் பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி பளை பிரதேசசபை செயலாளர் இ.து.சிவராசா, கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், பளைக்கோட்டக் கல்வி அலுவலர் சு.கயிலாயபிள்ளை, வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவர் தா.சுவாமிநாதன் பளை அரசியல் துறைப் பொறுப்பாளர் சாவகச்சேரி ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (ம-117)

## 35பேர் மீது விசாரணை

கொழும்பு,மார்ச்31

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மீதான துப்பாக்கிச சூட்டுச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் இதுவரை 35பேரை விசாரணைக்குட்படுத்தியுள்ளார்கள்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களின் விவரம் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-ரி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 27.03.2004
சனிக்கிழமை நடைபெற்ற
23ஆவது பட்டமளிப்பு விழாவில்
**திருமதி ராகினி முருகானந்தன்**
(ஆசிரியை, யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)
அவர்கள் பட்டப்பின் டிப்ளோமா பட்டம்
பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன்,
அவர் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற்றுப்
பல்லாண்டு காலம் நலமுடன் வாழ
வாழ்த்துகிறோம்.



துவாளி வீதி,
உடுப்பிட்டி.
T.P.No:226 3663 (C/34173) (19-18-24)
திரு.திருமதி றதி செல்லையா
குடும்பத்தினர்.



## நலம்பெறப் பிரார்த்திக்கின்றோம்

அமைச்சராக இருந்து மக்களுக்கு அரும்பணிகள் பல புரிந்து
அளப்பரிய சேவையாற்றிய முன்னாள் இந்து சமய
விவகார கலாசார அலுவல்கள் அமைச்சர்

**திரு.தி.மகேஸ்வரன்**

அவர்கள் 27.03.2004 மாலை அராஜகர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக அறிந்து மன வேதனை அடைவதுடன், இந்த அராஜக நடவடிக்கையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம். திரு.தி. மகேஸ்வரன் அவர்கள் விரைவில் பூரண சுகமடையவும் மீண்டும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று மக்கள் சேவையைத் தொடரவும் ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்
ப.நோ.கூ.சங்கம்
காரைநகர்.
(C/34171)(40-19-18-24)



## கண்ணீர் அஞ்சலி

**கறுவல்தம்பி கந்தையா சச்சிதானந்தம்**

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. S.மேமராஜ் அவர்களின் அன்புத் தந்தையார் க.சச்சிதானந்தம் இறைபாதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



சமுர்த்தி முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.
(சி34172)(39-19-18-24)

# காணி உடன் விற்பனைக்கு

டச்சு றோட், உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் 6 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:*

**Mrs. R.P. Cheliah,**
**Elephant Villa, Dutch Road, Uduvil.**

(சி-34157)(31-17-11)


# "உடுவிலின் வாழ்த்துக்கள்"

**செல்வி பிரபா பரமேஸ்வரன் BFA (Hons)**

(பழைய மாணவியும், ஆசிரியரும் உடுவில் மகளிர் கல்லூரி)

அவர்கள் யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நடனத்துறையில் முதலாம் வகுப்பில் சித்தி அடைந்ததுடன் பல்துறைத் திறமைக்கான பேராசிரியர் துரைராஜா நினைவு தங்கப் பதக்கத்தினையும் பெற்றதையிட்டு மட்டற்ற மகிழ்சி அடைகிறோம், பாராட்டுகிறோம், வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி-34156)(31-11-17)


# தேவை

*இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு பின்வருவோர் தேவை.*

1. விற்பனையாளர்கள்
2. ஒலிப்பதிவாளர்கள்
3. கணனித்துறை Photo Shop மற்றும் க்ணக்கியல் அனுபவம் உள்ளவர்கள்.
4. தொலைபேசி இயக்குநர்கள்.

தங்களது முழு விவரங்களும் முன் அனுபவ சான்றிதழ்களுடனும் கடிதம் மூலம் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 09.04.2004**

விளம்பர இல: 2211

உதயன், யாழ்ப்பாணம்.

(சி34161)(37-11-17-31)


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன விஞ்ஞான ஆசிரியர்

**திரு. S.பாலச்சந்திரன்** அவர்களின்

அன்புப் பேர்த்தியார்

**கந்தையா சிவபாக்கியம்** (இணுவில் மேற்கு)

அவர்கள் காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

The Express Institute
Irupalai, Kopay.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஆளணியினர்.

(30239)(17)

## எரி பொருள் நிலையம் புனரமைப்பு

சாவகச்சேரி,மார்ச்31

சாகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும் எரிபொருள் நிரப்பு நிலையம் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தால் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த எரிபொருள்நிரப்பு நிலையம் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இந்த நிலையம் பலத்த சேதமடைந்து காணப்படுகிறது. (ஓ-31)

## திருட்டு வழக்கில் குற்றவாளிக்கு ஒரு வருடக் கடூழியம்

யாழ்ப்பாணம்,மார்ச்31

யாழ். நகர்ப்பகுதியில் உள்ள தொழில் நிலையம் ஒன்றில் இலத்திரணியல் பொருள்களைத் திருடிய குற்றத்திற்காக ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடினார் என்று தென்மராட்சி கச்சாய் வீதியைச் சேர்ந்த நபர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதிமன்றில் நீதிபதி இ.த. விக்னராசா முன்னிலையில் இடம்பெற்றது.

அப்போது சந்தேக நபர் தனது குற்றங்களை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்த நீதிவான் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து உத்தாவிட்டார். (ஓ-5)

## கச்சாய் ஆலயம் புனருத்தாரணம்

தென்மராட்சி,மார்ச்31

யுத்தத்தினால் முற்றாகச் சேதடைந்த கச்சாய் தெற்கு பாதாள வைரவர் ஆலயப் புனருத்தாரணப் பணிகள் ஆலய பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலய புனருத்தாரணக் கும்பாபிஷேகம் மே மாதம் 25ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. (ஓ-117)


பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ.து)

# பதவி வெற்றிடம்

பதவி : உழவு இயந்திர சாரதி 207/12

சம்பள அளவுத்திட்டம் : 4000 - 75x10 - 80x10 - 5550

தகைமை : 5ஆம் வகுப்பில் சித்தியடைந்திருப்பதுடன் இழுபொறிப்பெட்டியுடன் உழவு இயந்திரம் செலுத்தக்கூடியவாறான சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருப்பதுடன் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

வயது : 25 முதல் 45 வரை.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இல, கல்வித் தகைமைகள் என்பவற்றை உள்ளடக்கிய விவரங்களைச் சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 14.04.2004 ஆம் திகதிக்கு முன்பாக *"பொது முகாமையாளர், பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிராமக் கோட்டடி, புலோலி."* எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

*கிராமக்கோட்டடி,*
*புலோலி.*

\- பொது முகாமையாளர்.

(சி-34159)(31-17-11)


# 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

மலர்வு: 16 05 1936



உதிர்வு: 01 03 2004

**திருமதி றோஸ் மாகிரற் அன்ரனிரட்ணம்**

*(குஞ்சு ரீச்சர் - சூராவத்தை)*

நாள்கள் முப்பத்தியொன்று ஆயிற்றே
நீங்கள் மறைந்து
கள்ளமில்லா வெள்ளை உள்ளமும்
கனிவு மிக்க பொன் மொழிகளும்
புன்னகை மாறா பொன்முகமும்
கொண்ட எம்மினிய தெய்வமே!
*தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்*
*வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*

*"தவவாசா"*
*நாக்கியம் புலம்,*
*ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*

பிரியமுள்ள
சகோதரி குடும்பத்தினர்
மற்றும் உறவினர்கள்.

(30291)(37-17-31-11)

# சேவை நலன் பாராட்டு

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## திரு. கி. சோமசுந்தர ஐயர்

### வாழி! பல்லாண்டு வாழி!

திரு.கிருஷ்ணசாமிஐயர் சோமசுந்தரஐயர் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்ததைத் தொடர்ந்து 1972இல் ஆசிரியர் சேவையில் இணைந்து சுமார் முப்பத்திரண்டு வருடங்கள் இப்பணியை சிறப்பாக செய்தபின்னர். தனது விருப்பத்தின் நிமிர்த்தம் இன்று ஓய்வுபெறுகின்றார். தான் கல்விகற்ற கல்லூரியில் பணியாற்ற வேண்டும் என்ற பெருவிருப்போடு 1992இல் இடமாற்றம் பெற்று வருகைதந்ததோடு தனது பணியைச் சிறப்பாகச் செய்தார்.

எமது கல்லூரியில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் மாணவர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். பொதுப் பரீட்சையில் கணிதபாடத்தில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறச்செய்த நல்லாசானாக விளங்கிய இவர் தனது பணியை மிக அமைதியாக செய்துவந்ததுடன் மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வி விருத்தியில் அக்கறை செலுத்திவந்த நல்லாசானுமாகவும் திகழ்ந்தார்.

இவர் ஆற்றிய நற்பணியின் பயனாக இவரது பிள்ளைச் செல்வங்கள் கல்வியில் உயர்ந்து விளங்குகின்றார்கள். இவர் தனது கற்பித்தல் பணிக்கு மேலாகக் கல்லூரியின் விளையாட்டுத் துறையில் இல்லப் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டதுடன் சமயச் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக விளங்கியவர்.

இவருடைய ஓய்வுக் காலம் மகிழ்வாகவும் நலமாகவும் சிறப்புப் பெற எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

பொ.கமலநாதன்,
அதிபர்.

### சிறந்த நல்லாசான்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெறும் திரு. கி. சோமசுந்தர ஐயர் அவர்கள் ஒரு சிறந்த நல்லாசான். அடக்கம், அமைதி எல்லோருடனும் பழகும் பண்பு என்பன அவரின் அணிகலன்கள்.

கணித ஆசிரியராக விளங்கிய அவர் தனது கற்றல் திறமையால் மாணவர்களின் மனங்களில் தனித்துவமான இடத்தைப்பிடித்துக் கொண்டவர்.

மாணவர்களின் உள நிலையறிந்து அவர்களின் பின்புலத்தை தெரிந்துகொண்டு அவர்களுக்கேற்றாறபோல் கற்பிக்கின்ற திறமையை ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்ட ஆசிரியர் சோமசுந்தரம் ஐயர் அவர்கள், மாணவர்கள் கணித பாடத்தில் காத்திரமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு காரணகர்த்தாவாக இருந்தார்.

32 வருடங்கள் ஆசிரிய பணியாற்றிய அவர் எமது கொக்குவில் இந்துக் கல்லூரியில் 12வருடங்களை அர்ப்பணித்து இன்று ஓய்வு பெறுகின்றார். அவர் தனது ஓய்வு காலத்தில் எல்லா நலனும் பெற்று சிறப்போடு வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

சி.சிவகுமாரன்,
தலைவர்,
ஆசிரியர் கழகம்.



**திரு.கி.சோமசுந்தர ஐயர்**

(கிருஷ்ணசாமி ஐயர் சோமசுந்தரஐயர்)

இளைப்பாறும் - திகதி :-31.03.2004
முதல் நியமனத்திகதி :-02.02.1972
கணிதப்பயிற்சி ஆசிரியர்.

இப்பாடசாலையில் இணைந்த திகதி:- 20.09.1992

*சேவை விவரம்-*

கு/கொட்டம்பிட்டிய முஸ்லிம் வித்தியாசாலை - 02.02.1972 - 20.05.1973.
யா/அருணோதயாக்கல்லூரி - 21.05.1973 - 31.01.1976
யா/மயிலணி சைவ வித்தியாசாலை - 01.02.1976-20.01.1977
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - 21.01.1977- 31.12.1978
யா/புன்னாலைக்கட்டுவன் ம.வித்தியாலயம் - 01.01.1979 - 16.02.1979
கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை - 17.02.1979 - 30.04.1986
யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலை - 01.05.1986 - 31.12.1988
யா/நாவாந்துறை றோ.க. பாடசாலை - 01.12.1989 - 19.09.1992
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - 20.09.1992 - 31.03.2004

### நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

நான் ஆசிரியராகக் கடமையாற்றிய காலங்களில் என்னிடம் கற்ற மாணவர்களில் பலர் ஆசிரியத் தொழிலில் இணைந்து சேவை புரிந்து ஒருவர் பின் ஒருவராக இளைப்பாறிவருகின்றனர்.

திரு.கி.சோமசுந்தர ஐயர் ஆசிரியர் அவர்களும் இந்த வகை மாதிரிகளில் ஒருவராவார். இக்கல்விப்பாரம்பரியங்களின் பரம்பரையான உறவு முறையினால் அக்காலத்திற்கே உரித்தான கலாசார பண்பாட்டுவிழுமியங்கள் போற்றப்பட்டு வந்ததைக் காணமுடிகிறது. நடைமுறையில் இப்பண்பாட்டு கலாசார விழுமியமரபுகள் மாற்றம் பெற்று வருவதையும் கண்கூடாகக் காண்கிறோம்.

மாணவர்களின் கற்றற் செயற்பாடுகளில் நேரடி பங்கில் ஆசிரியரே முதன்மையானவர். எமது கல்லூரியின் வரலாற்றில் கணித ஆசானாகிய திரு.சி.சோமசுந்தரஐயரின் இளைப்பாறுதலானது தவிர்க்க முடியாததாகிறது. ஆசிரியர் ஒருவர் இளைப்பாறும் போது நெஞ்சுக்கு இனிய நினைவுகளைத் தாங்கி ஓய்வு பெறுகின்றார். தமது ஆசிரியப்பணியின் சிறப்புக்களையும் அறுவடைகளையும் பாடசாலையைவிட்டு இளைப்பாறிய பின் சமூகத்தின் பன்முகத்தரிசனமாகக் காண்கின்றனர்.

இவர் தனது ஓய்வு காலத்தில் தமது குடும்பத்தாருடன் இன்புற்று வாழ வாழ்த்துகிறேன். மாணவராய்க்கண்டு ஆசிரியராய் வளர்ந்த ஒருவரை ஆசிரியராக கற்பித்து அதிபராய் (முன்னாள்) வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன்.

அ.பஞ்சலிங்கம்,
முன்னாள் அதிபர்,
யா/கொக்குவில்இந்துக் கல்லூரி.

### இனிமையான கணிதம்


'கணிதபாடம் சிலருக்கு கசப்பு ஆனால் சர்மா அவர்கள் கற்பித்தாலோ அது இனிமை. கற்கண்டு என கணிதபாடத்தை மாணவர்கள் விரும்பும் வகையில் கற்பித்தவர். அவரது மென்மையான இயல்புகள் அற்புதமானவை. யாரையும் புண்படுத்தாமல் திறமையாகச் செயற்பட்டார். மிகவும் கஷ்டமான நிலையில் கூட மனம்தளராமல் அமைதியாக நடக்கும் வல்லமைமிக்கவர். அவரது இன்சொல், இனிய பண்பு என்பன மாணவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். சக ஆசிரியர்களை சகோதரர்களாய் பாவித்து பெருமைபெற்றவர். அவரது பிள்ளைகள் அவரது நற்பண்புகளைக் கொண்டு கல்வியில் சிறந்து விளங்குகின்றார்கள். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பெருமைமிகு ஆசிரியர் பட்டியலில் சர்மாவின் பெயரும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகிறது. அவரும் அவரது குடும்பத்தினரும் வளமான வாழ்வு பெற ஆண்டவன் அருள்புரிவானாக.

சுடர் இ.மகேந்திரன்,
முன்னாள் அதிபர்.

(சி-34154)(17-13-31)

# கொள்கைக்கான தேர்தல் 2004

## எமது தலைமை தமிழீழ விடுதலைப் புலிகள் : எமது இலட்சியம் தமிழீழத் தாயகம்.



தமிழீழப் பெண்களே!
உங்கள் வாழ்வில் இன்றைய நிலைமையை மாற்றி
அதிசயிக்கத்தக்கதோர் முன்னேற்றம் காணலாம்.


அது உங்கள் கையில் உள்ளது.



பெண்களின் பிரச்சினைகள்,
தேவைகளை அறிந்து
உலகரங்கில் பேசப்படும்
நிலைமையை உருவாக்குவோம்!



பெண்களின் தளைகளை நீக்கி,
ஆற்றலை வெளிக்கொணர்ந்து
தொழில் உலகில்
சாதனையாளர்களாக மாற்றுவோம்!



பிள்ளைகள் மகிழ்ச்சியோடு
கல்வியில் ஈடுபட்டு,
உயர் தேர்ச்சியடைய வழிசமைப்போம்!

நேற்றுவரை மின்னாது முழங்காது
தேசத்தின் விடுதலைக்கு வலுச்சேர்த்தவர்,


## பத்மினி சிதம்பரநாதன்

ஒரு தேசத்தின் எழுச்சிக்கு...




தாய் நிலத்துக்கும் விடுதலை
தமிழ்ப் பெண்களுக்கும் விடுதலை

நெல்லியடி வாழ் மக்கள்




- நாடறிந்த கூட்டுறவாளர்,
- நலியாத நாட்டுப் பற்றாளர்,
- இடம்பெயர் மக்களுக்கு, இதம் சொல்லி அணைப்பவர்,
- இனிய தொண்டர் - நல்லவர் - வல்லவர்.

# எங்கள் சி.சிவமகாராசாவுக்கு வாக்களிப்போம்




## சிவமகாராசாவின் வெற்றி கூட்டுறவின் வெற்றி!
## குலையாத தமிழர் உறுதியின் வெற்றி!!

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க

ஊழியர் தொழிற்சங்கம், ஊழியர் நலன்புரிச் சங்கம், ஊழியர் ஐக்கிய நாணய சங்கம்.


# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் Broiler குஞ்சுகள் உடனே விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசனார் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30290)

இல.237, கே.கே.எஸ். வீதி, யாழ்பபாணத்தில் (மிட்டாஸ் கடைச் சந்திக்கும் சத்திரத்துச் சந்திக்கும் இடையில்) அமைந்துள்ள (நீளம் 30அடி அகலம 16அடி) கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.0777 722564 (24hrs) 021 222 5120 (10.00 - 5.00p.m. (30290)

11ஸ்ரீ தொடரிலக்க Corella கார் (வெள்ளை நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 211, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 222 - 6188 (30290)

## தவறிவிட்டது

42, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி பஞ்சலிங்கம என்பவருடைய தேசிய அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் 27.03.2004 சனிக்கிழமை யாழ்.காங்கேசன்துறை வீதிக்கும் கலட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சி-34166)

வெள்ளைக் கவருடன் Sony கையடக்கத் தொலைபேசி (0777-6327656) ஒன்று இராசபாதையில் நல்லூருக்கும் முடமாவடிக்கும் இடையில் 29.03.2004 திங்கட்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் திரு. கணேசன், 232, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-34166)


**MATHS, ENGLISH**

O/L A,B,C பெறுபேறுபெற ENGLISH G.A.Q, B.A -I, II SPOKEN ENGLISH ஆங்கிலம் மூலம் 6,7 சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.

தொடர்பு:-
85. சிவன் கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி.

(30046)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் தனியார் மயப்படுத்தப்பட்ட Medical Clinic ஒன்றுக்கு ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (MLT) தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

மேலும் கம்பியூட்டர் மயமான இயந்திரத்தில் (Computeriled Analyser) இரத்தப் பரிசோதனைகள் பழக விரும்பும் விஞ்ஞான அல்லது ஆய்வுகூட அறிவுடைய பெண் பிள்ளைகளும் தேவை.

**சென்றல் கிளினிக்**
**வைமன் றோட், நல்லூர்.**
T.P.: 222 6069
காலை 7.00 - 8.00
மாலை 5.00 இற்கு பின்

(30263) (21-19-12)


## கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்31

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்திய தமிழ் மொழிக் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவு யாழ். கல்வி வலயத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)


## நலம் பெற வேண்டுகின்றோம்

கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த முன்னாள் ! இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் விரைவில் குணமடைந்து தமிழ் மக்களுக்கு மேலும் சேவையாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
கைதடி - நாவற்குழி தெற்கு - கைதடி.

(30279)(21-12-19)



உ
சிவமயம்

கரவெட்டி கிழக்கு கிழவிதோட்டம்
ஸ்ரீவிக்கினவிநாயகர் தேவஸ்தான
புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா

விநாயகர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனி மாதம் 22ஆம் நாள் (04.04.2004) ஞாயிற்றுக்கிழமை உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் சேர்ந்த காலை 6.05 மணிமுதல் 6.30மணிவரை உள்ள மீனலக்கின சுபவேளையில் ஸ்ரீவிக்கின விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

பங்குனி 18ஆம் நாள் (31.03.2004) புதன் காலை கர்மாரம்பம்
பங்குனி 19ஆம் நாள் (01.04.2004) வியாழன் சாந்திகள்
பங்குனி 20ஆம் நாள் (02.04.2004) வெள்ளிக்கிழமை யாகாரம்பம்
பங்குனி 21ஆம் நாள் (03.04.2004) சனிக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்துதல்
பங்குனி 22ஆம் நாள் (04.04.2004) ஞாயிறு காலை 6.05 - 6.30மணிக்குள்

மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு:
சிவாச்சார்ய குருமணி
சிவஸ்ரீ.நா.யோகிஸ்வரக்குருக்கள்.
(பிரதமகுரு, யா/அத்தியடிப் பிள்ளையார் கோயில்)

கிழவிதோட்டம்,
கரவெட்டி.

(30300)(21-12-19)

தேவஸ்தான
பரிபாலன சபையினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்குரிய அரியாலையூர் நண்பர்கள்



ப.காண்டீபன்
B.Com.



ச.ஹரிதாஸ்
B.B.A.



ச.விமலன்
B.Com.

ஆகிய மூவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 27.03.2004 சனிக்கிழமை அன்று நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்றதையிட்டு நாம் அகமகிழ்வதுடன் இவர்கள் கல்வியில் மேன்மேலும் உயர்வு பெற்று வாழ்வில் சிறப்படைய மனநிறைவோடு வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
அரியாலை வாழ் நண்பர்கள்.

அரியாலை. (30296)(26-21-12-19)

## யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால்
நடத்தப்படும்
## நன்றி செலுத்தும் வழிபாடு
தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம்
அவர்களின் வாழ்வின்
**106ஆவது பிறந்ததின**
**நினைவு கூரல் வழிபாடு**
இடம் : சென். ஜோண்ஸ் ஆலயம், சுண்டுக்குளி.
காலம் : இன்று (2004.03.31) புதன்கிழமை
மாலை 4.00 மணி (S.L.T)
சிறப்புரை
**தந்தை செல்வாவின் வாழ்வும் பணியும்**
அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ்.ஜெபநேசன்
(பேராயர் – தென் இந்தியத் திருச்சபை யாழ். அத்தியட்சாதினம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.
(30298)(39)



## தொலைபேசி இணைப்பு கூறுவிலை கோரல்
**வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி**

எமது சங்கத்தின் பாவனையிலுள்ள தொலைபேசி இணைப்பு (மோட்டோ றோலர்) விற்பனைக்கு இருக்கின்றது. இதற்கான கூறுவிலை கோரிக்கைகளை 10.04.2004ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு பிந்தாமல் *"பொதுமுகாமையாளர், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி"* என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் *"தொலைபேசி இணைப்பு கூறுவிலை"* என குறிப்பிடவும். தொலைபேசி இணைப்பை நேரில் பார்வையிட விரும்புவோர் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக தலைமைக் கந்தோரில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

நீர்வேலி. - பதில் பொது முகாமையாளர்.
2004.03.27 (சி-34164) (26-21-19)



## DADI ஜெனரேட்டர்

■ 10KW
■ நிசப்தமானது
■ மின்சக்தியில் இயக்கப்படுவது
'கொஸ்மோ' வர்க்கங்களும் கிடைக்கின்றன
செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிடெட் H
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு -10.
தொலைபேசி: 2337286. 2337283-5, 2324261-5
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
Access Graphics



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100/% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:-
Royal Industries, Colombo.
☎ 0112334603


ஏக விநியோகத்தர்கள்
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567
சத்திரத்துச் சந்திக்கு அருகில்


## ஜே.வி.பி.அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல்

கொழும்பு,மார்ச்31

ஜே.வி.பியின் அழகன் பகுதித் தேர்தல் அலுவலகம் மீது புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி)

## நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் சேகரிக்க முயற்சி

தென்மராட்சி,மார்ச்31

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நூல் நிலையம் புனரமைக்கப்பட்டதையடுத்து நூல் நிலையத்திற்குப் புத்தகங்களைச சேகரிக்க அபிவிருத்திச் சபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

யுத்தத்தின்போது கல்லூரி நூல் நிலையம் முற்றாகச் சேதமடைந்தது. அங்கிருந்த நூற்றுக்கணக்கான புத்தகங்களும் அழிந்து போயின. புனரமைக்கப்பட்ட நூல் நிலையத்திற்கான நூல்களை கல்லூரி பழைய மாணவிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரிடமிருந்து சேகரிக்க அபிவிருத்திச் சபையினர் முடிவுசெயதுள்ளனர்.

நூல் நிலையத்திற்குத் தேவையான புத்தகங்களை வழங்க விரும்புவோர் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அபிவிருத்திச் சபை செயலாளர் பி.சின்னத்துரை கோரியுள்ளார். (ம-117)

## ஆசிரியர், மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி,மார்ச்31

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கடந்த வருடம் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களும் கல்லூரி அபிவிருத்திச் சபையினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியை திருமதி அருள்ராணி சிவராசாவுக்கும் சித்திபெற்ற மாணவர்களுக்கும் பரிசுப் பொருள்களும் பணப் பரிசில்களும், சான்றிதழ்களும வழங்கப்பட்டன.

கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அபிவிருத்திச் சபைச செயலாளர் பி.சின்னத்துரையும், பெற்றோர் சார்பில் சி.கந்தசாமியும் உரையாற்றினார். (ம-117)

## சட்டவிரோத மின் பாவனை: 6 பேருக்கு அபராதம்

வடமராட்சி,மார்ச்31


சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 6 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறை மின் அத்தியட்சகர் எஸ்.செல்வச்சந்திரன் தலைமையில் மின்சாரசபை ஊழியர்களும், பருத்தித்துறைப் பொலீஸாரும் இணைந்து புலோலி மேற்கு, வியாபாரி மூலை, சக்கோட்டை அல்வாய் ஆகிய இடங்களில் மேற்கொண்ட தீவிர பரிசோதனையின் போதே இவர்கள் சிக்கினர்.

இந்த 6 பேரையும் பொலீஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். 6 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் மின்சாரம் பெறப் பாவித்த மின் உபகரணங்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். (ஒ-173)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | சிவன் அடியில் |
|---|---|---|
| 27 | | 19 |
| – | | – |
| 12 | | 02 |
| – | | – |
| 1959 | | 2004 |



அமரர் **துரைராசா ஸ்ரீமுருகராசா**
(முருகன்)
(ஊழியர், இலங்கை மின்சாரசபை, மன்னார்)

நாற்பத்தைந்து நாள்களும் சென்றதுவோ முருகா!
இன்னமும் எங்கள் மனம் கலங்குகின்றதே முருகா!
நீ உலாவிய இடமெல்லாம் உன் உருவந்தான் தெரிகிறதே!
கேட்போருக்குப் பதில் சொல்ல முடியாமல் மனம் துடிக்கிறதே!
பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் கலங்கி நிற்க,
கட்டிய மனைவி கதறி அழ
பெற்றெடுத்த பிள்ளைகள் கதறித் துடித்து அழுது நிற்க,
உடன் பிறந்த சகோதரங்கள் உள்ளம் பதறித் துடித்து நிற்க,
மைத்துனர், மைத்துனி மனங்கலங்கி தவிப்புடன் ஏங்கி நிற்க
எல்லோரையும் விட்டு விட்டு எங்குதான் சென்று விட்டீர்கள்?
உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*மயிலு வீதி,* உங்கள் பிரிவால் வாடிநிற்கும்:
*ஆறுகால்மடம்.* (30303) **ந.பாஸ்கரன்** (மைத்துனர்).
(21-19-18)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 26 |
| – | | – |
| 07 | | 03 |
| – | | – |
| 1933 | | 1999 |



திருமதி **வேலாயுதர் அன்னலட்சுமி**
திதி: 31.03.2004

என்றும் எம்மனவானில் அமைதி கொள்ளும் அம்மாவே!
நீங்கள் மறைந்து இன்று ஆண்டுகள் ஐந்தானாலும்
ஆறுமா எங்கள் துயர்?
இன்று உங்களை நினைந்து கண்ணீர் விட்டு
அழுதாலும் மாறாது வேதனை.
(21-12-19)

| நிரந்தர முகவரி: | தற்காலிக முகவரி: | உங்கள் பிரிவால் துயருறும்: |
|---|---|---|
| *"பிருந்தாவனம்",* | *62, செட்டித்தெரு,* | பிள்ளைகள், |
| *கைதடி வடக்கு,* | *நல்லூர்.* | மருமக்கள், |
| *கைதடி.* | (30305) | பேரப்பிள்ளைகள். |

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாரிமுத்து சிவஞானவதி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து சிவஞானவதி அவர்கள், தற்பொழுது உரும்பிராய் வடக்கில் உள்ள இல்லத்தில் 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - அன்னமுத்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாரிமுத்து (இளைப்பாறிய Railway உத்தியோகத்தர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் (மலேசியா), செல்வநாயகம் (மலேசியா), அரியநாயகம் (மலேசியா), தனேஸ்வரி (சிங்கப்பூர்), பரமேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெகதீஸ்வரி (மலேசியா) அவர்களின் சகோதரியும் இரத்தினாவதி, யோகாமபிகை, பராசக்தி, சற்குணவதி (கனடா), சிவனேசன் (கனடா) ஆகியோரின அன்புத் தாயாரும் மகேஸ்வரன் (C.W.E - இளைப்பாறிய உத்தியோகத்தர்), பஞ்சரத்தினம் (C.T.B - இளைப்பாறிய உத்தியோகத்தர்), சிவனேசதுரை (உள்ளூராட்சித் திணைக்கள அலுவலகள்), குலசிங்கம் (கனடா), சுலோஜனா (கனடா) ஆகியோரின் மாமியாரும் ரோகன், யசோதா, சுஜதா, சுகந்தா, தாமரைச்செல்வி சிவதாசன், யோகேந்திரன், விஜயகுமார், திலீபன், கலைமகள், பிரியா, பானு, வேணி, கோகிலன், ஜெனித்தா, சுஜித்தா, ஜெனுர்ஷன், லோர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்ஜித், தர்சிகன், பிறனேஷ், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2004) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் இருளன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,* (30277)(38-12-17) தகவல்:
*உரும்பிராய்.* **குடும்பத்தினர்.**

### செல்லையா சின்னம்மா

புங்கன்குளத்தைச் சேர்ந்த செல்லையா - சின்னம்மா 29.03.2004இல் நோர்வேயில் காலமாகிவிட்டார்.

அன்னார் தவமணிதேவி, பரமேஸ்வரி, விஜயகுலசிங்கம் (கனடா), மகேஸ்வரி (பிரான்ஸ்), ராசேஸ்வரி (ஜேர்மனி), செகராசசிங்கம் (நோர்வே), இராஜகுலசிங்கம் (நோர்வே),சுமதி (நோர்வே) ஆகியோரின் தாயாரும் சக்திவேல், சர்வானந்தராசா, செல்வராசா, நாகேந்திரம், விஜயறாஜ், பத்மாவதி, ரஞ்சனாதேவி, பத்மினி ஆகியோரின் மாமியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*புங்கன்குளம்.* (30304)(21-19-18) தகவல்:
**க.தவமணிதேவி** (மகள்).


## பொதுத் தேர்தல் - 2004 - ஏப்ரல் 02

வடக்கு கிழக்கு மாகாண மக்களை ஒன்றிணைத்து சமஷ்டி, தமிழீழம் வேண்டும் என்று குரல் கொடுத்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சாத்வீக ரீதியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.
**எஸ்.முத்துலிங்கம்**
(முன்னாள் கிராம சபைத் தலைவர்)
**சுயேச்சைக்குழு - 01**
இல 10 X
வெற்றிபெற வாழ்த்துகின்றோம்

X
-இணுவில் வாழ் நண்பர்கள்.

# தேசம் ஒருமித்துவிட்டது!
# தீயவர்கள் ஒதுங்கிவிட்டனர்!
# பார்முழுதும் பரந்த தமிழினம் அங்கீகரித்துவிட்டது!
# வீட்டிற்கு வாக்களித்து
# விடுதலையை வென்றெடுப்போம்!

★ நான்கு தமிழ்ப் பெருங்கட்சிகள் ஒன்று சேர்ந்தன!
★ விடுதலைப் புலிகள் பூரண ஆதரவளித்து நிற்கின்றனர்!
★ பல்வேறு பொது அமைப்புகள் அங்கீகரித்து நிற்கின்றன!
★ மாணவர் ஒன்றியங்கள் அணி சேர்ந்து நிற்கின்றன!

இப்படை தோற்கில் எப்படை வெல்லும்
வீடு எமது சின்னம்!
வெற்றி எமது திண்ணம்!!
தமிழர் விடுதலை எமது இலட்சியம்!
அதற்காக நாம் அணி திரள்வோம்!
அளிப்போம் வீட்டிற்கு வாக்கை.
தமிழர் தேசிய கூட்டமைப்பை வலுப்படுத்துவோம்.
வீட்டிற்கு வாக்களித்து வெற்றியை உறுதி செய்வோம்.




## "ஒருமித்து நிற்கும் எம்மினத்தின் தலையாய கடமை வீட்டிற்கு வாக்களிப்பதே"

- இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
- வெண்மை வாணிபச் சங்கம், யாழ்.மாவட்ட ஒன்றியம்
- யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
- யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்
- யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சமாசம்
- கூட்டுறவு ஊழியர் சங்கம், தெல்லிப்பழை
- சமாதான நீதிவான்கள் சங்கம், யாழ்.மாவட்டம்
- தனியார் கல்விநிறுவன ஒன்றியம், யாழ்.மாவட்டம்
- இந்துகுருமார் ஒன்றியம்
- தேசிய தொழிலாளர் சங்கம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில் சாலை
- சர்வதேச மாணவர் பேரவை
- யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
- வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்

# யாழ்.மண்ணில் எம்மை உலுக்கிய அரச பயங்கரவாதங்களில் சில........
# எதிராக கஜேந்திரன் வழிநடத்திய போராட்டங்களில் சில..................

கொழும்புத்துறைப் பகுதியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டவரின் சடலம்



துரோகிகளின் கொலை வெறிக்கு பலியான பத்திரிகையாளன் நிமலராஜன்



செம்மணியில் புதையுண்டு போன எமது உறவுகள்



துரோகிகளின் இரத்த வெறிக்கு பலியான ஏரம்பு பேரம்பலம்



"மக்கள் சக்தி மாபெரும் சக்தி
அதனை சீண்டிப் பார்த்தால்
சிதறிப் போவீர்கள்"
செயற்படுத்திக் காட்டியவன்

## - செல்வராஜா கஜேந்திரன் -





பளைப் பகுதி மக்களை மீட்பதற்கான மக்கள் போராட்டம்



தேசியத் தலைவர் மீதான அரசின் சிறைத்தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து மாபெரும் கண்டனப் பேரணி



யாழ்.பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடியேற்றி சுதந்திரதினம் துக்க தினமாக அனுஷ்டிப்பு



பொங்குதமிழ் ஓராண்டு நிறைவு எழுச்சி நிகழ்வு




நிமலராஜன் படுகொலைக்கு எதிரான கண்டனப் பேரணி





தமிழ்மக்களின் அபிலாசையை உலகின் காதுகளில் ஓங்கி அறைந்த-பொங்கு தமிழ்ப் பேர



பிந்துனுவெவ கைதிகள் படுகொலைக்கு எதிரான கண்டனப் பேரணி



தமிழ் மக்கள் எரிமலையாய் வீறுகொண்டெழுந்த பொங்குதமிழ்



| தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | | X | 10 |
|---|---|---|---|

உண்மைக்கும் நேர்மைக்கும் தேசப்பற்றுக்கும் வாக்களித்து எமது விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்போம்.

-குடாநாட்டுத் தமிழ் மக்கள்-

## உடற்பயிற்சிப்போட்டி

யாழ்.கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ-5)


**O/L DAY CLASS**
ஆரம்பம் : 05-04-2004
திங்கள் - 9 மணி
சமூகக்கல்வி : E.A.சிஜகன்
ஆங்கிலம்: T.R.ராஜவேல்
மது கல்வி நிறுவனம்
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

**SHAMROCK**
J/ஈச்சமோட்டை வீதி
**A/L 2006**
**CHEMISTRY**
☆ **GENERAL CHE.**
ஆரம்பம்: Mon., Thurs. 3.30 p.m.
**Mr.JEYANTHAN B.Sc.**
(24) (30315)


## நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

28.03.2004 ஞாயிறு அன்று தனது அறுபத்திநாலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய எமது பேராயர்

**பேருள்திரு.கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன்**

அவர்களை நம் நாட்டுக்கும் திருச்சபைக்கும் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென தென் இந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீன மக்கள் வாழ்த்துகின்றோம்.

(சி-34181) (24-12-11-16)

## 1ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 06 - 09 - 1922 |  | 01 - 03 - 2004 |

அமரர்

### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(அல்லையம்பதி)

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம ...ந்திப் பிரார்த்தனையும், பஜனையும் இன்று (31-03-2004) ...ன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ் ...ல் கலந்துகொண்டு தொடர்ந்து நிகழும் மதிய போசனத் ...லும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் ...னைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

...ல்லையம்பதி,
...ன்னாலை, கரவெட்டி.(C-34178)(12-11-16)

மனைவி,
பிள்ளைகள்.


**லிபேட்டி** அச்சுவேலி



தனுஷ், அபர்னா நடித்த
(சீக்கல்)
காட்சிநேரம் : 3.00, 7.00 (பு.நே.)
(C-33771)(15)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல்
சரத்குமார், விக்ரம், தேவயானி நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 புதிய
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**The Italian Job**
(C33770) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்
வசீகரன் பூஜா நடித்த
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)



(C/33519) (12)



**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக், தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R.ரஹ்மானின் இசையில்....
**உதயா**
தினசரிகாட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (புதிய நேரம்.)

வடபுலத்தில் திரைப்படத்தைத் திரையிடும் உரிமையானது நாகம்ஸ சினிமாவுக்கே மட்டும் உரித்தானது! இதனை மீறி மறைமுகமாகத் திருட்டு நடவடிக்கைகள் மூலம் VCD, CD சிறுதிரையரங்குகளில் காட்சிப்படுத்தப்படுவது சட்டப்படி குற்றமாகும். துஷ்பிரயோகம் செய்வோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.




(C-34180) (12-14-16)



Jayoda **ஜயோதர**

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல 6145511 முதல் 6157503 வரை
சீட்டிழுப்பு இல.19 திகதி 29-03-2004

வெற்றி எண்கள் **7 2 3 9 0 6** சுப்பர் எண் **1**

சுப்பர் ஜக்பொட் பரிசு **16,482,550/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 16,482,550/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 550,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 530,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,039 | 500/- | 519,500/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 10,425 | 50/- | 521,250/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 103,295 | 10/- | 1,032,950/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 8 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 103 | 1,000/- | 103,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,048 | 100/- | 104,800/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 10,329 | 20/- | 206,580/- |
| மொத்தம் | 126,365 | | 4,608,080/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.4,608,080/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட் ரூ. **16,772,375/-**

தொடர் இல. 7120004க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஏப்ரல் 01ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சேர் மாக்கஸ் பெர்னாண்டோ வீதி, கொழும்பு 7.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6148594-5-35
6146487-6-74
6154352-3-52
6148334-7-52
6146152-8-68


## இணுவில் பொது நூலகம் சனசமூகநிலையம்

புனருத்தாரண இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும்
இணுவில் பொது நூலக வளாகத்தில் அமைக்கப்பட்ட
*கலாசார மண்டபத் திறப்புவிழாவும்*
பரிசில் வழங்கல் வைபவமும

இடம் :- இணுவில் பொது நூலகம்
காலம் :- 31.03.2004 புதன்கிழமை பி.ப.3.00 மணி
தலைவர் :- க.சசிகுமாரன் (*இணுவில் பொது நூலகம*)
பிரதம விருந்தினர்:- திரு.எஸ்.திருவாகரன் (*பிரதேச செயலாளர், வலிகாமம் தெற்கு*)
சிறப்பு விருந்தினர்:- திரு.இ.சிவலோகநாதன (K.R.S. நிறுவனம்)
குறிப்பு:- நூலக ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சை, பேச்சுப்போட்டி, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், சதுரங்கம், கரம், துடுப்பாட்டப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி34187)(37-17-11) -இணுவில் பொது நூலகம-

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
திருமதி P.கஜலட்சுமி அவர்களின் பாசமிகு தாயார்
கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

### திருமதி மங்கையர்க்கரசி நடராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(C/34172)(11-16-12) யாழ்.சமூக செயற்பாட்டு மைய உத்தியோகத்தர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை செல்வி ஸ்.இராஜினியின அன்புத் தந்தை

### யோசப் ஸ்ராலின்

மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
யா/உடுத்துறை மகாவித்தியாலயம்,
தாளையடி.

(C/34172)(11-16-12)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா செல்லாச்சி



பண்டத்தரிப்பு, அம்மன் வீதியைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லாச்சி நேற்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுபத்திரை, பூமணி, கனகரத்தினம், வடிவேலு (பூராசா) மற்றும் இரத்தினம், தணிகாசலம், இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்துரை, ஆறுமுகம், செல்லத துரை, திருநாவுக்கரசு, செல்வராணி, மனோன்மணி, பத்மாவதி ஆகியோரின் அருமை மாமியாரும் பூபால சிங்கம் (சுவிஸ்), வேல்முருகன், ரகுபதி, கமலாம்பிகை (ஜேர்மனி), சுந்தரலிங்கம், மகேந்திரம், ஜெயம், சேகர் (ஜேர்மனி), சறோ, மணி (பிரான்ஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), லலிதா, வசந்தி (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), சாந்தா, விஜயா, சிவராசா (சுவிஸ்), ராகினி (சுவிஸ்), அன்னம்மா, தவம், உதயா, கிரிசா, ரவிச்சந்திரன், ரவீந்திரன் (கனடா), குணரதி, சுதா கரன் (சுவிஸ்), குணவதனி, குணரஜனி (சுவிஸ்), சிறீதரன் (டோகா), காண்டீ பன், கஜன் ஆகியோரின் பேர்த்தியும் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2004) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*பண்டத்தரிப்பு,* (30317)(37-12-11-16)

தகவல்:
குடும்பத்தினர்.

### கணபதிப்பிள்ளை கனகலிங்கம்

கொட்டடி, சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும் 93, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை கனகலிங்கம் அவர்கள் நேற்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாக்கியம் அவர்களின் அன்பு மகனும் வினோதினியின் அன்புக் கணவரும் பிறேமினி, சபிதாமினி, சியாமினி, சபிகரன், விசாகரன் ஆகியோரின் தந்தையாரும் விவேகாவின் மாமனாரும் அமரர் தனலக்சுமி, கனகம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2004) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*93, ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்*

தகவல்
க.சபிகரன் (மகன்).

(30319)(37-12-16-11)

# ஈழத் தமிழினத்தின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிக்கவுள்ளனர். இதன்மூலம் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் என்பதை எடுத்துக்கூறவுள்ளோம்.

யுத்தத்தின் மூலம் எமது பலத்தைக் காட்டிய நாம், இன்று சமாதானத்தில் நம்பிக்கை வைத்து அதன்படி செயற்பட்டு வருகிறோம்.

இத் தேர்தலின் மூலம் தமிழினம் சொல்லப் போகும் செய்தியில்தான் எமது தடைகள் அகற்றப்படுவதுடன் உண்மையான சமாதானமும் ஏற்படும். அதற்காகத் தமிழ்மக்கள் அனைவரும தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யவேண்டும் - என்றார்.

**சி.வி.கே.சிவஞானம்**

கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான சி.வி.கே.சிவஞானம் தனதுரையில் தெரிவித்ததாவது:-

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்டத்தில் 6 ஆசனங்களைக் ல்கைப்பற்றியிருந்தது. அதனுடன் ஐ.தே.கட்சியில் போட்டியிட்ட தி.மகேஸ்வரனும் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியிருந்தார். அதுவும் தமிழ்க கூட்டமைப்புக்குரிய ஆசனந்தான். அந்த வகையில் பார்க்கும்போது இம்முறை யாழ்.மாவட்டத்தில் 9 ஆசனங்களையும் கூட்டமைப்பே கைப்பற்ற வேண்டும். நிச்சயமாக அது நடக்கும்.

ஈழத்தமிழர்கள் என்றுமே இந்தியாவின் எதிரிகள் அல்லர். இந்தியாவை என்றும் நேசிப்பவர்கள் அவர்கள். எனவே, இந்தியா ஈழத்தமிழர்களை எதிரிகளாகப் பார்க்கக்கூடாது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவைதா ஏ் நல்ல தலைவன் தோன்றுவ ன் என்று சொல்வார்கள். பிரபாகரன் எங்களுக்குக் கிடைத்த நல்லதொரு தலைவன். அந்தத் தலைவன் காலத்தில் தமிழினம் சமாதான வாழ்வை நிச்சயம் அடைந்தே தீரும் - என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

கூட்டமைப்பின் மற்றொரு வேட்பாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது வெறுமனே 4 கட்சிகளைக் கொண்டதல்ல. தமிழ்மக்களின் ஒட்டு மொத்த ஆதரவைப் பெற்றதுதான் கூட்டமைப்பு. இத்தேர்தலானது சர்வதேச சமூகத்துக்குப் பல செய்திகளைச் சொல்லப் போகிறது. தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும், சுதந்திரமாக வாழவும், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை நிரூபிக்கவும் இந்தத் தேர்தலானது ஒரு களமாக அமையப் போகிறது.

வடக்கு - கிழக்கில் கூட்டமைப்பு 25 ஆசனங்களைப் பெற்றால் நிச்சயமாக சர்வதேச சமூகத்துக்கு தமிழர் தரப்பின் உண்மை நிலையைக் காட்ட முடியும். அவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஓரிரு வருடங்களில் ஈழத்தமிழ் மக்கள் அனைவரும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியும் என்றார்.

கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் வேட்பாளர் அ.குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரசாரக் கூட்டத்தில் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள், தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் மற்றும் பிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டமைப்புக்குச் சார்பாக உரையாற்றவிருந்த மகேஸ்வரன் கடந்த சனிக்கிழமை இரவு இனந் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

இதன் காரணமாக கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற அவர் தன் சார்பாக செ.செல்வராசா என்பவரைப் பிரதிநிதியாக அனுப்பியிருந்தார். அந்தப் பிரதிநிதியும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கூட்டம் நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில், சுற்றாடல் எங்கும் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களிலான கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கூட்டத்தின் இடையே தமிழீழ இசைக்குழுவின் எழுச்சிக்கானங்களும் தமிழீழக் கலை, பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவின் சங்குநாதக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிளும் இடம்பெற்றன.

தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட மதகுருமார்கள், கல்விமான்கள், கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஓ-10)

# யாழ். தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பும் முடிவுக்கு வந்தார் எனக் கூறப்பட்டது.

இதுவரை நடைபெற்ற எந்தத் தேர்தல்களின்போதும் சிங்களக் கண்காணிப்பாளர்களை வடக்குக்கு இந்நிலையம் அனுப்பவில்லை.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களோடு உள்ளூர் தமிழ்க்கண்காணிப்பாளர்கள் சிலர் சேர்ந்தே கடந்த காலங்களில் வடக்கின் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுவந்தனர்.

ஆனால், உள்ளூர் தமிழ்க் கண்காணிப்பாளர்களில் தங்களுக்கும் நம்பிக்கை இல்லை என்றும் -

சிங்கள - முஸ்லிம் கண்காணிப்பாளர்கள் வடக்கில் பணிக்கு அழைக்கப்படவேண்டும் என்றும் -

டக்ளஸ்தேவானந்தா அண்மைக் காலத்தில் வலியுறுத்தி வந்தார். இந் நிலையில் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் ஐவர் மட்டுமே தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தினால் இம்முறை வடக்கில் பணியில் அமர்த்தப்படுவர் எனக் கூறப்பட்டு வந்தது.

எனினும், தேர்தலுக்கு இரண்டு நாள் இருக்கையில் - கடைசிநேரத்தில் - பத்து சிங்களக்கண்காணிப்பாளர்களை வடக்கே பணிக்கு அவசர அவசரமாக அனுப்பிவைக்க நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து நடவடிக்கை எடுத்திருக்கிறார் எனக் கூறப்பட்டது.

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தினால் சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஐவருக்கு மேலதிகமாக சிங்களக் கண்காணிப்பாளர்கள் பத்துப் பேர் மட்டும் இம்முறை வடக்கில் கண்காணிப்பில் ஈடுபடுவர். தமிழர்கள் எவரும் இந்தக் கண்காணிப்பாளர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை. (க)

# தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் கந்தையா கனகசபையும் துப்பாக்கிச் சூடு காரணமாக இறந்துவிட்டனர் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த சீனித்தம்பி தம்பிப்பிள்ளைக்கு தீவிர சிகிச்சை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பற்றி தகவல் கிடைத்ததும் மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகர் இராஜன் சத்தியமூர்த்தியின் வீட்டுக்கு விரைந்து சென்றார். மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர் என்று கூறப்படும் இருவரையும் பிடிக்க தீவிரமுயற்சி மேற்கொண்டார்.

மட்டக்களப்பில் பொலீஸ், இராணுவ ரோந்து நடவடிக்கைகள் பலப்படத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நியமனப்பத்திரத் தாக்கலின் பின்னர் இடம் பெற்ற மூன்றாவது தேர்தல் படுகொலைச் சம்பவம் இதுவாகும். முன்னர் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை, ஈ.பி.டி.பி. உறுப்பினரான பொ.யோகேந்திரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனால் மட்டக்களப்பு எங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அடுத்து என்ன நடக்குமோ என்று எல்லோரும் அஞ்சுகின்றார்கள், வெள்ளிக் கிழமை எப்படித் தேர்தல் சுமுகமாக நடக்க[illegible]ாகிறது என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.


**SUBRA (14)**

**O/L DAY CLASS**

ஆரம்பம் 05.04.2004

(திங்கள்)

மதியம் 12.00 மணி.

(C/34145)(40)


# இந்திய மீனவ...

(முதலாம் பக்கத் தொடச்சி)

லையில் நேற்று இடம்பெற்றன. அப் போது சந்தேக நபர்கள் அனைவரும் தாம் குற்றவாளிகள் என்பதை ஒப் புக்கொண்டனர்.

அவர்களின் சார்பில் வாதிட அரசால் நியமிக்கப்பட்டிருந்த சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு, இந்தமீனவப்படகோட்டிகள் நீண்டகாலமாக சிறையில் இருப்பதால் அவர்களின் குடும்பங்கள் வறுமையால் வாடுகின்றன என்றும் - இவர்கள் தவறுதலாகவே இலங்கைக் கடல் எல்லைகுள் பிரவேசிக்க நேர்ந்தது என்றும் நீதிபதியிடம் சுட்டிக்காட்டினார். இனிமேல் இவ்வாறான குற்றத்தை அவர்கள் புரியமாட்டார்கள். தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்கிறார்கள். எனவே, அவர்களை விடுதலை செய்யுமாறு நீதிவானிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்தமை மிகவும் பாரதூரமான குற்றம் என்று அரசசட்டவாதி செல்வி சுகந்தி சாமி நீதிபதியிடம் தெரிவித்தார். டன், இக் குற்றச்சாட்டுக்கு 15 ... ரூபா வரை அபராதம் விதிக்க... என்று தெரிவித்த அரச சட்ட... இதனைக் கருத்திற்கொண்டு பொ... தமான தண்டனை விதிக்குமாறு நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்த...

இருதரப்பு வாதங்களையும் கேட்... பின்னர் நீதிபதி எதிரிகளுக்கு தல... 50 ஆயிரம் ரூபா அபராதமாகச் செலு... தும்படி உத்தரவிட்டதுடன், அபராத தொகையைக் கட்டத் தவறினால் ... வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்... 5 வருட கடூழியச் சிறைத்தண்டனை... அனுபவிக்க வேண்டும் என்றும்...

இவர்களால் பாவிக்கப்பட்ட வி... படகுகள், வலைகள் மற்றும்... கரணங்கள் என்பன பறிமுத... யப்படுமென்றும் தெரிவித்தார். மீனவர்களின் கைவிரல் அ... களைப் பதிவுசெய்யுமாறும்... ஸாருக்கு நீதிபதி உத்தர...

# இராஜன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் அமைதியான சூழ்நிலையில் மேற்கொள்ளப்பட்டுவந்த தேர்தல் செயற்பாடுகள் கருணா குழுவினர் ஏற்படுத்திய குறுக்கீடுகள், தலையீடுகள் காரணமாக தேர்தல் களம் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருந்தது.

மட்டு. மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் இச்சம்பவங்களால் தமிழ் மக்கள் நிலைதடுமாறாது, நடைபெறவுள்ள இத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்து தமிழரின் தேசிய பலத்தை உலகுக்கு உணர்த்துங்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசக்.

(முதலாம் பக்கத் தொ...

தல் நிலைப்பாடுகள் தொட... கலந்துரையாடுவதுடன் மு... உட்பட யாழ்.குடாநாட்டில்... படும் வாக்களிப்பு நிலையங்... விஜயம் செய்யவுள்ளன...

அத்துடன், நாளைமறுதினம்... பெறும் நாடாளுமன்றத் தேர்தல்... முறைகள் மற்றும் குழறுபடிகள்... லாத முறையில் நடைபெறுவதை... சகல வாக்களிப்பு நிலையங்களுக்... நேரில் செல்லவுள்ளதுடன், வாக்கு... னும் நடவடிக்கைகளையும் காணிக்கவுள்ளனர் எனத்தெரி... பட்டது.


## துயர் பகிர்கின்றோம்

எமது அன்புக்குரிய நண்பன்,

செல்வன் பிரசன்னா அவர்களின் அன்புத் தந்தையா...

**சொக்கலிங்கம் பாலச்சந்திரன்**

*(கிராம அலுவலர்)*

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் கவலையும் வேதனையும் அடைகின்றோம். இவரின் மறைவால் துயறுரும் குடும்பத்தினரின் கவலையில் நாமும் பங்குகொள்வதுடன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள், 98 - கணித, விஞ்ஞானப்பிரிவு,
மு/மல்லாவி மத்திய கல்லூரி.

(30285)(37-11-16-31)

## மரண அறிவித்தல்

**செல்வி வேலாயுதபிள்ளை பிறேமினி**

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த செல்வி வேலாயுதபிள்ளை பிறேமினி அவர்கள் நேற்று (30.03.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற S.A, பிரதேச செயலகம் தென்மராட்சி) - கோமாவதி தம்பதிகளின் அன்பு மகளும் கவிதி (T.O., பிரதேச செயலகம் பளை), காந்திமதி (கனடா), கலாமோகன் (கனடா), கமலறாணி (பேராதனைப்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்னேஸ்வரனின் மைத்துனியும் ஜெயராம் (சட்டத்தரணி), பிறேமாவதி (B.A) ஆகியோரின் பெறாமகளும் தங்கராசா, சிவக்கொழுந்... ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2004) புதன்கிழமை பி.பகல் 4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தி... தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரு... ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் வடக்கு,*
*வைத்தியசாலை வீதி,*
*மட்டுவில்.*

தகவல்
வே.கோமாவதி (தாய்...

(சி34188)(37-11-16-31)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS


324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்


பதிவுகள் 06.04.2004 இற்கு முன் நேரில்

MCS



அடக்குமுறைகள், அராஜகம் ஒழிந்திட
அகதி அவல வாழ்வு நீங்கிட
சாந்தி, சமாதானம் நிலவிட
உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துங்கள்,

திருநாவுக்கரசு ஸ்ரீதரன் - ஈ.பீ.ஆர்.எல்.எவ்








இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2004ஆம் திகதி இரவு அச்சிட்டு வெளியிடப்பெற்றது.